# இந்த மலையைப் பார்த்துப் பேசு

---

# SPEAK TO THIS MOUNTAIN

57-1215

ஞாயிற்றுக்கிழமை மாலை, டிசம்பர் 15, 1957

மாரநாதா டெம்பிள், புரூக்ளின், நியூயார்க், அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# செய்தி: 57-1215 - இந்த மலையைப் பார்த்துப் பேசு

நாம் தலைகளைத் தாழ்த்தி ஒரு வார்த்தை ஜெபம் செய்வதற்கு, ஒரு நிமிடம் எழுந்து நிற்போம்.

ஸ்தோத்திரிக்கப்பட்ட ஆண்டவரே, வழி யற்ற காற்றில் கழுகை நீர் எப்படி வழிநடத்துகிறீர் என்பதை அறிந்து நாங்கள் உமக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். நீர் சிலரை தண்ணீரின் வழியாகவும், சிலரை வெள்ளத்தின் வழியாகவும் வழிநடத்துகிறீர்; சிலரை ஆழமான சோதனைகள் வழியாகவும், ஆனால் அனைவரையும் இரத்தத்தின் வழியா கவும் வழிநடத்துகிறீர். நீர் உமது பிள்ளைகளை வழிநடத்தும் விதம் எத்துணை ஆச்சரியமானது. ஜீவனுள்ள தேவனுடைய பெரிதும் வல்லமை

யுள்ளதுமான சபையின் வழியில் எதுவும் நிற்க முடியாது; அது ஜெயம் கொள்ளும். நரகம் அனைத்தும் அதற்கு விரோதமாக இருந்தாலும், அது ஜெயம் கொள்ளும், ஏனென்றால் அதற்கு முன்னாக ஒரு பெரிய மற்றும் வல்லமையுள்ள வெற்றியாளராகிய கர்த்தராகிய இயேசு செல்கிறார்.

பிதாவே, இன்றிரவு எங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். உம்மிடமிருந்து கேட்பதற்காக நாங்கள் தாழ்மை யான பிள்ளைகளாக நிற்கிறோம். இன்றிரவு ஒவ்வொரு இருதயத்துடனும் பெரிதும் வல்லமையுள்ள விதத்திலும் பேசுவீராக. எந்தவொரு அவிசுவாசத்திற்கும் எங்கள் இருதயங்களை மூடிப்போடும். ஆண்டவரே, விசுவாசத்தின் வாசல்களைத் திறந்து, பரிசுத்த ஆவியின் காற்றின் மீது ஏறி உள்ளே வாரும். எங்கள் மத்தியில் உள்ள வியாதியஸ்தர்களையும் பாதிக்கப்பட்டவர்களையும் குணமாக்கும். ஆண்டவரே, வழியில் சோர்ந்துபோனவர்களை ஆசீர்வதியும். வழியோரத்தில் விழுந்துபோன அந்த ஒருவரை, இழந்துபோனவரை

இரட்சிக்கும் படியும் நாங்கள் உம்மை கேட்டுக்கொள்கிறோம்.

2 இந்த சபையின் போதகரும், எங்களுக்கு மிகவும் பிரியமான சகோதரருமாகிய பிரதர் ஹட்சின்ஸ் (Brother Hutchins) அவர்களை நீர் ஆசீர்வதிக்கும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். சகல ஆவிக்குரிய சத்தியத்திலும் நீர் அவரை வழிநடத்துவீராக. இந்த பயணத்தில் நீர் அவருடன் இடைபட்டு முடியும் வரை, அவர் அன்பில் நிலைத்திருந்து உம்மோடு கூடவே நடப்பாராக. போதகர்கள், உதவிக்காரர்கள் (deacons) மற்றும் இந்தச் சிறந்த ஐக்கியத்தோடு தொடர்புடைய அனைவரையும் ஆசீர்வதியும். இன்றிரவு நாங்கள் புறப்பட்டுச் செல்லும்போது, எம்மாவு சீஷர்களைப் போல, "வழியிலே அவர் நம்முடனே பேசினபோது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா" என்று நாங்களும் சொல்லும் படி செய்யும். இயேசுவின் நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென். அமருங்கள்.

3 இந்தச் சிறந்த சபையில் மீண்டும் இருப்பதற்கான சிலாக்கியத்தைப் பெற்றதில்

இன்றிரவு நான் எல்லாவற்றிற்கும் மேலாக மகிழ்ச்சியடைகிறேன்; நான் மிகவும் பூரிப் படைகிறேன். நாம் இங்கு நடத்திய கடைசி கூட்டத்தின் நினைவுகள் இன்னும் நீடிக்கின்றன. சற்று நேரத்திற்கு முன்பு, நானும் பையன்களும் அந்தப் பாலத்தைக் கடந்து வந்து கொண்டி ருந்தோம்... சரியாக ஒரு வருடம் முன்பு இதே இரவில்தான் நாம் இங்கிருந்து கூட்டத்தை முடித்துவிட்டுச் சென்றோம்: இன்றிரவோடு ஒரு வருடம் ஆகிறது. கர்த்தர் காரியங்களை எப்படிச் சரியாகக் கால நிர்ணயம் செய்கிறார், நமக்கு அது விளங்காமல் இருக்கலாம், ஆனால் அவர் காரியங்களைச் சரியாகவே செய்கிறார். இந்த நகரத்தின் எல்லையான நெவார்க் (Newark)-ஐ சந்திக்கும் சிலாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது. எனவே, நெவார்க்கைச் சேர்ந்தவர்கள் அதைப்பற்றித் தவறாக நினைக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன், ஆனால் உங்களுக்கு அருகிலிருக்கும் உங்கள் சிறிய சகோதரி பட்டணம் என்று நான் அதைச் சொல்கிறேன். மேலும் கர்த்தர் இந்த வாரம் எங்களை மிகவும் அதிகமாகவும் ஏராளமாகவும் ஆசீர்வதித்தார்.

நான் எனது விடுமுறைக்காக இங்கே வந்தேன். இலையுதிர் காலத்தின் ஆரம்பத்தில் நான் எனது விடுமுறையைத் தொடங்கினேன். ஆனால் எங்கள் குழுவினர் அனைவருக்கும் ஆசியக் காய்ச்சல் (Asian flu) ஏற்பட்டது; அதனால் நாங்கள் திரும்பி வர வேண்டியதாயிற்று. பின்பு நான் சால்மன் நதியில் (Salmon River) எனது விடுமுறையைத் தொடங்கினேன், அது திரும்ப வராத நதி (River of No Return) என்று அழைக்கப் படுகிறது, நான் அமெரிக்காவில் இருக்கும்போது ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்தவ வர்த்தகர்கள் (Christian Business Men) என்னை அங்கே அழைத்துச் செல்வார்கள். அங்கே சென்ற இரண்டாவது நாளில், ஒரு சகோதரர் இறந்துவிட்டார் என்ற சிறிய செய்திகளைப் போட்டுக்கொண்டு ஒரு விமானம் மேலே வந்தது, அதனால் நான் வெளியே வந்தேன்.

பின்னர் கலிபோர்னியாவில் உள்ள லேக் போர்ட்டில் (Lakeport), கண்காட்சி மைதானத்தில் எனக்குக் கூட்டம் இருந்தது. நான் வீட்டிற்கு வந்தபோது, ஒருவேளை எனக்குச் சிறிது ஓய்வு கிடைக்கும் என்று நினைத்தேன்.

சகோதரர் போஸ்வொர்த் (Brother Bosworth) மரணப்படுக்கையில் இருப்பதாக எனக்கு அழைப்பு வந்தது. எனவே அவரைப் பார்ப்பதற்காக நான் விரைந்து புளோரிடாவுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்தேன். என் மனைவி, "இப்போது, லூயிஸ்வில் அல்லது கென்டக்கியில் கூட்டம் தொடங்கும் முன் இந்த நாட்களில் நீங்கள் வீட்டில் இருக்கலாம்," என்று சொன்னார்.

அப்போது சகோதரர் ஹட்சின்ஸ் எனக்குத் தந்தி மூலம் அழைப்பு விடுத்தார். அன்று நான் எல்லாரையும் மறுத்திருந்தேன், ஆனால் இந்தச் சிறிய சகோதரரையும், சகோதரர் ஜோசப்பையும் என்னால் மறுக்க முடியவில்லை, அதனால் இங்கே வந்தேன். எனவே நான் மிகவும் களைப்பாகவும் சோர்வாகவும் இருக்கிறேன். சற்று நேரத்திற்கு முன்புதான் நாங்கள் ஒரு பெரிய சுகமளிக்கும் கூட்டத்தை முடித்துவிட்டு வந்தோம், தொண்டைக்கட்டி களைப்ப டைந்திருக்கிறேன்.

நான் சகோதரர் ஹட்சின்ஸிடம் சொன்னேன்; "இன்றிரவு நான் பிரசங்கம் மட்டும் செய்து விட்டுப் போகலாமா," என்று கேட்டேன்.

"நாளை மதிய உணவிற்குப் பிறகு கென்டக்கியிலுள்ள லூயிஸ்வில்லில் மற்றொரு சந்திப்பைப் பிடிப்பதற்காக, நான் இன்றிரவு முழுவதும் வாகனம் ஓட்ட வேண்டும், இன்றிரவு நெடுஞ் சாலைகள் வழியாக ஓட்டிச் செல்ல வேண்டும்," என்று சொன்னேன்.

அதற்கு அவர், "நீங்கள் அவர்களுக்காக ஜெபிக்கவில்லை என்றால் மக்கள் கொஞ்சம் ஏமாற்றமடைவார்கள் என்று நான் நம்புகிறேன்," என்று சொன்னார்.

நான் சொன்னேன், "சரி, நான் அவர்களுடன் சிறிது நேரம் பேசிவிட்டு ஜெபிக்கிறேன். அப்புறம் நான் என் பையனை உள்ளே அனுப்பி, ஜெபிக்கப்பட வேண்டியவர்கள் அநேகர் இருந்தால், மக்களை வரிசையில் நிற்க வைப்பதற்காகச் சில கார்டுகளை (cards) கொடுக்கச் சொன்னேன்." எனவே நாங்கள் அதைச் செய்ய முயற்சிப்போம்.

4 இப்போது, இன்றிரவு உங்களுக்குப் பிரசங்கம் செய்வதற்குப் பதிலாக... நான்... முதலாவது நான் ஒன்றும் பெரிய பிரசங்கி இல்லை. ஆனால் நான் உங்களுக்கு ஒரு சிறிய

சாட்சியையோ, அல்லது அது போன்ற ஒன்றையோ சொல்ல விரும்புகிறேன், அல்லது வார்த்தையைப் பற்றிச் சில நிமிடங்கள் பேசிவிட்டு, பின்னர் நோயாளிகளுக்காக ஜெபிப்பதில் அதிக நேரத்தைச் செலவிட விரும்புகிறேன்.

**5** இப்போது, மாற்கு சுவிசேஷம் 11-ம் அதிகாரத்தில், 20-வது வசனத்தை வாசிக்க விரும்புகிறேன். ஒரு சிறிய முன்னுரையைப் பெறுவதற்காக, அல்லது சற்றுப் பின்பு நான் ஒரு சந்தர்ப்பப் பொருளாகப் பயன்படுத்த விரும்புவதற்கு ஒரு சிறிய வேதப் பகுதியாக... நான் வார்த்தையை வாசிக்க விரும்புகிறேன். நீங்கள் அதை நேசிக்கிறீர்களா? ஓ, அதைப் போல வேறு எதுவும் இல்லை, நமது ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகரின் விலையேறப் பெற்ற வார்த்தை. உங்களுக்குத் தெரியும், வேதவசனங்கள் மிகவும் பரிபூரணமானவை, அவை ஒருபோதும் தோல்வியடையாது.

இப்போது மாற்கு 11-ம் அதிகாரம் 20-வது வசனம், ஒரே ஒரு சிறிய வசனம்.

**மறுநாள் காலையிலே அவர்கள் அவ் வழியாய்ப் போகும்போது, அந்த அத்திமரம் வேரோடு பட்டுப்போயிருப்பதைக் கண்டார்கள்.**

*கர்த்தர் அந்தச் சிறிய வேதப்பகுதிக்குத் தமது ஆசீர்வாதத்தைச் சேர்ப்பாராக.*

6 தேவனுடைய வார்த்தை மிகவும் வழுவாதது (infallible), அதில் ஒரு சிறு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒருபோதும் தவற முடியாது. அந்த வேதவசனத்தின் அடிப்படையில் மட்டும் நம்மால் ஒரு நித்தியத்தையே அமைக்க முடியும், அது ஒருபோதும் தவறாது என்று அறிந்து கொள்ளலாம். ஏனென்றால் அது தேவனின் ஒரு பகுதியாகும்; தேவன் தமது வார்த்தையில் இருக்கிறார். நாம்... அது எப்பொழுதும் எப்படி நடக்கிறது என்பதைக் கவனியுங்கள், அது எவ்வளவு விசித்திரமாகத் தோன்றினாலும், தேவன் தமது சொந்த நல்ல நேரத்தில் ஒவ்வொரு வார்த்தையையும் சாட்சி பகர வைக்கிறார்.

இயேசு பூமியில் இருந்தபோது, "வேத வாக்கியம் அவமாக்கப்படாது" என்று

சொன்னார். மேலும் அவர், "நீங்கள் இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே நான் இதை எழுப்புவேன்," என்று சொன்னார், ஏனென்றால் அது வேத வசனத்தின் அடிப்படையில் இருந்தது.

தாவீது தீர்க்கதரிசி, "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்," என்று சொல்லியிருந்தார். அந்த வேதவசனம் தம்மைக் குறித்தது என்று அவர் அறிந்திருந்தார், ஏனென்றால் அந்த வேதவசனம் மேசியாவாகிய பரிசுத்தருக்குரியது. ராஜ்யத்தில் தமது ஸ்தானத்தையும் நிலைப்பாட்டையும், தாமே அந்த நபர் என்பதையும் அவர் அறிந்திருந்தார். எனவே வேதவசனங்கள் அவமாக்கப்படாது என்பதை அறிந்து; அந்த வேதவசனம் அவமாக்கப்படக் கூடாதபடியினால், எழுபத்தி ரண்டு மணி நேரத்திற்குள் தமது சரீரம் மீண்டும் உயிர்த்தெழ வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

பலர் ஆச்சரியப்படுகிறார்கள்... மூன்று பகலும் இரவும் என்று அவர் சொன்னார், நீங்கள் அதை எடுத்துக்கொண்டால், அது

"மூன்று பகல் மற்றும் இரவுக்குள்" என்று சொல்கிறது. அவர் வெள்ளிக்கிழமை மதியம் இறந்தார், ஞாயிற்றுக்கிழமை காலையில் எழுந்தார். ஏனெனில் அந்த விலையேறப்பெற்ற சரீரத்தின் ஒரு செல் கூட அழிய முடியாது, ஏனென்றால் தேவனுடைய வார்த்தை அது அழியாது என்று சொல்லியிருந்தது. அழிவு உண்டாவதற்கு முன்பே தாம் பூமியிலிருந்து உயிரோடு எழுப்பப்படுவோம் என்பதை அவர் அறிந்திருந்தார். அதுதான் வார்த்தை சொன்னதன் மேல் நம்பிக்கை வைப்பதாகும்.

7 "என்னைக் குறித்து அப்படிப்பட்ட ஒரு வேதவசனம் இருப்பதை நான் அறிந்திருந்தால், நானும் அதே விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியும் என்று நம்புகிறேன்," என்று நீங்கள் சொல்லலாம். எனது அன்பான நண்பர்களே, வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு தெய்வீக வாக்குறுதியும் உங்களுக்குச் சொந்தமானது. அது அவருக்கு எவ்வளவு அவசியமோ, அது உங்களுக்கும் அவ்வளவு அவசியமானது. தேவன் செய்திருக்கும் ஒரு வாக்குறுதியை நீங்கள் இங்கே கண்டுபிடித்தால், அந்த வாக்குறுதி உங்களுக்குச் செயல்படத் தவறு

வதற்கு முன்பு வானங்களும் பூமியும் ஒழிந்து போகும். ஏனென்றால் அது விசுவாசிக்குரியது: எவன் விரும்புகிறானோ அவன் வந்து இந்த ஆசீர்வாதங்களில் பங்கு பெறலாம்.

நாம் ஆசீர்வாதங்களைத் தவறவிடுவதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று... நினைவில் கொள்ளுங்கள், "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." நாம் அதைத் தவறவிடுவதற்குக் காரணம், நாம் அதை (வார்த்தையை) போதுமான அளவு உட்கொள்வதில்லை. "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலேயும் பிழைப்பான்," என்று இயேசு சொன்னார். மனுஷன் தேவனுடைய வார்த்தையினால் தனது அனுதின அப்பத்தைப் பெற வேண்டும். ஆனால் நாம் அதை, ஏதோ ஒரு வெகுதூரத்து வாக்குறுதியாக, வேறேதோ காலகட்டத்தில் இருக்கும் ஒன்றாக மாற்ற முயற்சிக்கிறோம். ஆனால் வேதாகமம், "இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்," என்று சொல்கிறது, நாம்

இருப்போம் என்று அல்ல, நாம் இப்பொழுது இருக்கிறோம்.

தேவன் அதைச் சிக்கலாக்கவில்லை. அது சிக்கலானது என்று பலர் நினைக்கிறார்கள். ஆகையால், அதை ஏதோ ஒரு கடினமான காரியமாக மாற்ற முயற்சிப்பதன் மூலம் வார்த்தையின் உண்மையான ஆசீர்வாதத்தை அவர்கள் இழக்கிறார்கள். தேவன் எந்த விதத்திலும் சிக்கலானவர் அல்ல என்பதை அவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட வார்த்தையின் மூலம் என்னால் முடிந்தவரை உங்களுக்கு வெளிப்படுத்துவதே இந்த அடுத்த பத்து அல்லது பதினைந்து நிமிடங்களில் எனது நோக்கமாகும். விசுவாசி அதைச் சிக்கலாக்குகிறான்; தேவன் அதை எளிமையாக்குகிறார்.

8 இப்போது, இன்றிரவு நமது வேதப் பகுதியில், இயேசு எருசலேமிலிருந்து வந்திருந்தார், வழியில் நோயுற்ற மற்றும் தேவையுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களை அவர் பார்த்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. மக்கள் நினைப்பது போல், அநேக பெரிய காரியங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், "பிதா தமக்குச் சுட்டிக்காட்டுகிறவரைத்

தம்மால் எதுவும் செய்ய முடியாது," என்று அவர் யோவான் 5:19-ல் சொன்னார். தேவன் அவருக்கு என்ன செய்ய வேண்டும் என்று முதலில் காண்பிக்கும் வரை, நமது ஆசீர்வ திக்கப்பட்ட ஆண்டவர் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை. தேவனுடைய ஆசீர்வாதங்களை எடுத்துத் தான் விரும்பியபடி வீசி எறிய அவருக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் வேதவசனங்கள் அவமாக்கப்படாது. மேலும் அவர், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதா செய்கிறவைகளை குமாரன் காண்கிறதெதுவோ அதையேயன்றி, தம்மில் தாமே ஒன்றும் செய்யமாட்டார்," என்று சொன்னார். அப்படி யானால் அது உண்மை, ஏனென்றால் வேத வசனங்கள் அவமாக்கப்படாது, அது அவருடைய உதடுகளிலிருந்து வந்த தேவனுடைய வார்த்தை.

அவருக்குள் இருந்த இந்த மகா பெரிய வல்லமை அனைத்தும்... ஏனென்றால் அவர் மெய்யாகவே மாம்சத்தில் வெளிப்பட்ட யேகோவா தேவனாக இருந்தார். அவர் ஒரு

தீர்க்கதரிசி அல்ல. அவர் சிருஷ்டிகர், தீர்க்கதரிசியாகிய தேவன்.

இன்று மக்கள் அவருடைய தெய்வீகத் தன்மையை அவரிடமிருந்து எடுத்து, அவரை வெறும் ஒரு போதகராகவோ அல்லது தீர்க்கதரிசியாகவோ மாற்ற முயற்சிக்கிறார்கள். ஓ, அவர்கள் மிகவும் தவறாக இருக்கிறார்கள். மனிதர்கள் அவருக்குக் கொடுக்கக்கூடிய மிகத் தாழ்வான பெயரை அவருக்குக் கொடுத்தார்கள்: ஒரு ஆவிபிசாசுக்காரன், குறிசொல்லுகிறவன், பெயல்செபூல். அவர்கள் அவரை மிகத் தாழ்வான நகரத்திற்கு அனுப்பினார்கள், அந்த நகரத்தின் மிகச் சிறிய மனிதன் கூட அவரைப் பார்ப்பதற்குக் கீழே குனிந்து பார்க்க வேண்டியிருந்தது. மனிதன் அவருக்கு அதைச் செய்தான், அவருக்கு மிகத் தாழ்வான பெயரைக் கொடுத்தான்.

ஆனால் தேவன் அவரை எவ்வளவு உயர்த்தினார் என்றால், அவர் பரலோகத்தைப் பார்ப்பதற்குக்கூட கீழே குனிந்து பார்க்க வேண்டும், மேலும் வானத்திலும் பூமியிலும் உள்ள எல்லா நாமத்திற்கும் மேலான இயேசு என்ற நாமத்தை அவருக்குக் கொடுத்தார்.

எல்லாப் பிசாசு சக்திகளும் மற்றெல்லாமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன. தேவன் தமது கீழ்ப்படிந்த குமாரனுக்குக் கொடுத்த அந்த நாமத்தின் கனத்திற்கு ஒவ்வொரு நாவும் அதை அறிக்கை செய்து, ஒவ்வொரு முழங்காலும் முடங்கும். அந்த நாமம் எவ்வளவு மகிமையானது...?...

9 நாம் வானத்தை நோக்கிப் பார்க்கும்போது தமது மகத்தான மகிமையை வெளிப்படுத்தும் யேகோவா தேவன், நட்சத்திரங்களும் சூரிய மண்டலமும் அவர் கையில் தூசியை விட அதிகமானது என்று சிந்தித்துப் பாருங்கள். நாசரேத்தாகிய இயேசு அந்தச் சாதாரண அத்திமரத்தைக் கடந்து சென்றபோது, அதில் சாப்பிடுவதற்கு ஏதேனும் கிடைக்குமா என்று பார்த்த அளவுக்கு அவர் கரிசனையுள்ளவராக இருந்தார். அவர், "ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருப்பானாக," என்று சொன்னார். மூல கிரேக்க மொழியில் இது, "ஒரு காலத்திற்கு (for a season)" என்று கூறுகிறது; "என்றென்றைக்கும் (forever)" என்ற வார்த்தை "ஒரு காலத்திற்கு" என்று மட்டுமே பொருள் படுகிறது. என்றென்றைக்கும் என்பது ஒரு கால

இடைவெளி, ஏனென்றால் அது என்றென்றைக்கும் மற்றும் (இணைப்புச்சொல்) என்றென்றைக்கும். ஆனால் நித்தியத்தில் தொடக்கமோ முடிவோ இல்லை.

எனவே அவர், "ஒருவனும் உன்னிடத்தில் ஒரு காலத்திற்கு கனியைப் புசியாதிருப்பானாக," என்று சொன்னார். இப்போது கவனியுங்கள், உடனடியாக அந்த மரத்திற்கு ஏதோ நடந்தது, ஆனால் அது நடந்தது என்று வெளியே காட்டிக்கொள்ளவில்லை. மறுநாள் அவர்கள் அவ்வழியாய்ப் போகும்போது, பேதுரு அந்த மரத்தைப் பார்த்தான். அவன், "இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று," என்று சொன்னான். ஏதோ ஒன்று நடந்திருந்தது.

அவர் அவர்களைப் பார்த்து, "மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: 'நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ,' என்று சொல்லி, தன் இருதயத்தில் சந்தேகப்படாமல்..." இப்போது, மூல மொழியில் லெக்சிகன்-கிரேக்க லெக்சிகனில் (Lexicon-Greek Lexicon) இது இவ்வாறு கூறுகிறது: "நீங்கள் இந்த மலையைப் பார்த்து, 'நீ உயர்த்தப்பட்டு சமுத்திரத்திலே

எறியப்படுவாயாக,' என்று சொல்லி, உங்கள் இருதயத்தில் சந்தேகப்படாமல், அது செய்யப் படுகிறது என்று விசுவாசித்தால், நீங்கள் சொல்வது உங்களுக்குக் கிடைக்கும்."

10 நாம் காரியங்கள் உடனடியாக நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம், ஆனால் அவர் எதை அர்த்தப்படுத்தினார். நீங்கள் மலையைப் பார்த்து, "நீ உயர்த்தப்பட்டு சமுத்திரத்திலே எறியப்படுவாயாக," என்று சொல்லுங்கள். பின்னர் நீங்கள் சொன்னது நடைபெறுகிறது என்று உங்கள் இருதயத்தில் விசுவாசியுங்கள்.

ஒருவேளை அந்த முழு மலையிலும் ஒரே ஒரு மணல் துகள் நகரத் தொடங்கலாம். உங்களால் அதைக் கவனிக்க முடியாமல் இருக்கலாம், ஆனால் உங்கள் இருதயத்தில் ஏதோ ஒன்று அது செய்யப்படுகிறது என்று சொல்கிறது. நீங்கள் சொல்வது உங்களுக்குக் கிடைக்கும். அதுதான் விசுவாசம். நம்மில் பலர் இரவில் ஜெபிக்கப்படுகிறோம், மறுநாள் காலையில், "சரி, எந்த மாற்றமும் இல்லை. நான் எந்த வித்தியாசத்தையும் உணரவில்லை," என்று சொல்கிறோம். அங்கேதான் நாம்

தோல்வியடைகிறோம். அது எதையும் வெளியே காட்ட வேண்டியதில்லை, ஆனால், "நீங்கள் சொல்வது செய்யப்படுகிறது என்று உங்கள் இருதயத்தில் விசுவாசித்தால், நீங்கள் சொல்வது உங்களுக்குக் கிடைக்கும்." அதுதான் விஷயம். நான் சொல்வது ஏற்கனவே நடந்து கொண்டிருக்கிறது என்று நான் விசுவாசித்தால், நான் அதை உணரவோ பார்க்கவோ வேண்டி யதில்லை. நான் அதை விசுவாசிக்கிறேன். அதனால்தான் அது நடைபெறுகிறது.

11 யாராவது... நான் நகரத்திலிருந்து மைல்கள் தொலைவில் நின்று, பசியோடு இருந்தால், ஒரு ரொட்டித்துண்டு (loaf of bread) என் உயிரைக் காப்பாற்றும் என்ற நிலையில், நான் உங்களிடம் ஒரு ரொட்டியைக் கேட்க, நீங்கள் எனக்கு இருபத்தைந்து சென்ட் (twenty-five cents - கால் டாலர்), அதாவது அந்த ரொட்டியின் வாங்கும் சக்தியை (purchase power) கொடுத்தால், இப்போது, நான் ரொட்டியை வாங்குவதற்குத் தயாராகக் கடையின் அருகில் நின்றுகொண்டிருந்தால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பேனோ, அதே அளவு மகிழ்ச்சியுடன் அந்த இருபத்தைந்து

சென்ட்களை வைத்துக்கொண்டு இருக்க முடியும். ஏனென்றால் என்னிடம் வாங்கும் சக்தி இருக்கிறது. இப்போது, விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதி என்று வேதாகமம் சொல்லுகிறது.

இப்போது, நம் கூட்டத்தில் உள்ள அநேக மக்கள் (இது உங்கள் நன்மைக்காகவே), கூட்டத்தில் உள்ள அநேக மக்கள் ஏதாவது ஒரு புலப்படக்கூடிய ஆதாரத்தை எதிர்பார்க்கிறார்கள். அது விசுவாசம் இல்லை. அது விசுவாசம் இல்லை. விசுவாசம் என்பது அது முரணாக இருந்தாலும் அதை நம்புவதாகும்; அது நம்புகிறது.

அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல மோசே உறுதியாயிருந்தான். ஆபிரகாமுக்கு எழுபத்தைந்து வயதாகவும், அவன் மனைவிக்கு அறுபத்தைந்து வயதாகவும் இருந்தபோது, தேவன் அவனுடைய மனைவியாகிய சாராளின் மூலம் ஒரு குழந்தையைத் தருவதாகத் தந்தையான ஆபிரகாமுக்கு வாக்குறுதி அளித்தார். ஆபிரகாம் இருபத்தைந்து ஆண்டுகள் அந்த வாக்குறுதியின் மேல் இளைப்பாறி, உறுதியாயிருந்தான். வாக்குத்தத்தம் பண்ணினவர்

அதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று அவன் எண்ணினான். தேவனுடைய வாக்குத் தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல், தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். நாம் ஆபிரகா மின் பிள்ளைகளாக இருக்க வேண்டும். இருபத்தைந்து ஆண்டுகளாக தேவன் அவனுக்குக் குழந்தையைக் கொடுக்கவில்லை, ஆனால் அவன் வாக்குத்தத்தம் பண்ணினவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, அவருடைய வார்த்தை தவறாது என்று அறிந்திருந்தான்.

12 எனது வாங்கும் சக்தியுடன், அங்கேதான் அது இருக்கிறது, கிறிஸ்தவ நண்பர்களே. தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். விசுவாசம் ஒரு கட்டுக்கதை (myth) அல்ல, அது நீங்கள் கற்பனை செய்யும் ஒன்றும் அல்ல என்பதைப் புரிந்துகொள்ள தேவன் நம் இருதயங்களைத் திறப்பாராக. விசுவாசம் உறுதியானது.

இந்தக் கண்ணாடி டம்ளர் எப்படி இருக்கிறதோ, இந்தப் புத்தகம் எப்படி இருக்கிறதோ, அதே போலவே விசுவாசம் ஒரு பொருள் (substance). "விசுவாசமானது நம்பப்

படுகிறவைகளின் உறுதியும் (substance)..." ஓ, அவருடைய பரிசுத்த நாமம் ஸ்தோத்திரிக்கப் படுவதாக. காணாதவைகளின் நிச்சயமுமா யிருக்கிறது, ஆனால் நீங்கள் அதை விசுவாசிக் கிறீர்கள். தேவன் அதைச் சொல்லியிருக்கும் போது, தேவன் தமது வார்த்தையைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாக்குறுதியும் உங்களுடையது, அதை உங்களுடையதாக நீங்கள் ஏற்றுக்கொள்ள முடிந்தால்.

13 இப்போது, என் கையில் கால் டாலர் நாணயம் (quarter) இருந்தால், ஒருவேளை நான் ரொட்டி கிடைக்கும் இடத்திலிருந்து ஐந்து மைல் தூரத்தில் இருக்கலாம். ஆனால் என் கையில் ஒரு ரொட்டி இருந்தால் எவ்வளவு மகிழ்ச்சியடைவேனோ, அதே அளவு என் கையில் கால் டாலர் நாணயம் இருக்கும்போதும் மகிழ்ச்சியடைய முடியும். ஏனென்றால், ரொட்டியின் வாங்கும் சக்தியைப் பெற்றிருக்கும் போது, என்னிடம் ரொட்டி இருப்பதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது. என் சுகத்திற்காக நான் விசுவாசத்தைப் பெற்றிருக்கும்போது, என்ன நடந்தாலும் அல்லது மருத்துவர் என்ன

சொன்னாலும், நான் அதைப் பெற்றுக்கொண்டது போலவேதான். அதைத்தான் நீங்கள் விசுவாசிக்கி றீர்கள்.

இப்போது, நான் அந்த கால் டாலர் நாணயத்தை வைத்துக்கொண்டு களிகூர ஆரம்பிக்கலாம். "நீ எதற்காகக் களிகூருகிறாய்; நீ ரொட்டி சாப்பிடவில்லையே."

"ஆனால் என்னிடம் வாங்கும் சக்தி இருக்கிறது." இன்னும் இரண்டு வாரங்கள்தான் நீங்கள் உயிரோடிருப்பீர்கள் என்று மருத்துவர் சொல்கிறார். ஆனால் நீங்கள் களிகூருகிறீர்கள். "எதற்காகக் களிகூருகிறீர்கள்?"

"தேவனுடைய வாக்குறுதி இங்கே நங்கூரமிடப்பட்டிருக்கிறது என்ற ஆதாரம் என் இருதயத்தில் உள்ளது. வேதனையிலுள்ள எந்தப் பிசாசுகளும் என்னை அதிலிருந்து அசைக்க முடியாது. நான் அதைப் பெறுவது நிச்சயம்." (நான் உங்களை நோக்கிச் சத்தம்போடவில்லை என்று நம்புகிறேன்.)

ஆனால் பாருங்கள், என்னிடம் கால் டாலர் நாணயம் கிடைத்ததும், நான் ரொட்டி

வாங்குவதற்காகக் கடைக்கு விரைந்து செல்கிறேன். வழி நெடுகிலும் நான் களிகூரலாம், ஒருவேளை நேரம் செல்லச் செல்ல நான் பலவீனமாகலாம். ஒருவேளை நான் கடையை அடைவதற்கு முன்பே எனக்கு மிகவும் பசியெடுத்து, என் வயிறு எல்லாம் பிடித்துக்கொள்ளலாம். அது ஒரு வித்தியாசமும் இல்லை. நான் பசியடைந்து நேரம் செல்லச் செல்ல பலவீனமடைகிறேன், ஆனாலும் அந்த ரொட்டியின் வாங்கும் சக்தியை நான் வைத்திருக்கிறேன்.

14 "உன்னால் விசுவாசிக்கக் கூடுமானால், உன் இருதயத்தில் சொல்லி, அது நடைபெறுகிறது (இப்போதே அது செயல்படத் தொடங்கிவிட்டது) என்று விசுவாசித்தால், நீ சொல்வது உனக்குக் கிடைக்கும்."

அப்போது, "ஆண்டவரே, நான் உம்மை விசுவாசிக்கிறேன், நான் குணமாகிவிட்டேன்," என்று மட்டும் சொல்லுங்கள். சந்தேகத்தின் நிழல் இல்லாமல் ஏதோ ஒன்று உள்ளே நங்கூரமிடப்பட்டிருக்கிறது. நீங்கள் அதைச் சொன்னதால் அது நடைபெறத் தொடங்குகிறது. நீங்கள் என்ன சொன்னீர்கள்? நீங்கள்

தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தினீர்கள், அது நித்தியமானது. அது தேவனுடைய வார்த்தையாக இருப்பதால் அது தோல்வியடையாது. தேவனுடைய வார்த்தை அது கொண்டிருக்கும் வாக்குறுதியைச் சிருஷ்டிக்கும்.

15 சமீபத்தில் நான் ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது ஒருவர் என்னிடம், "இந்த உலகம் அழிக்கப்படும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, அல்லது விசுவாசிப்பதாகச் சொல்கிறீர்களா?" என்று கேட்டார்.

நான், "ஆம்," என்றேன்.

அவர், "எப்படி அப்படி நினைக்கிறீர்கள்? அது எப்படி அழிக்கப்பட முடியும்?" என்று கேட்டார்.

நான், "தேவனுடைய வார்த்தையினால்," என்றேன்.

"அணு ஆயுதம் அதை அழிக்குமா?

நான் சொன்னேன், "அது வார்த்தையினால் அழிக்கப்படும். ஏனென்றால் வார்த்தை அதைச்

சிருஷ்டித்தது, அதைச் சிருஷ்டித்த அதே வார்த்தை, அது அழிக்கப்படும் என்று சொன்னது." தேவன் அப்படிச் சொன்னார். அது எப்படி நடக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அது நடக்கும். அதைச் சிருஷ்டித்த அதே வார்த்தைதான் அது முடியும் என்றும் சொன்னது.

தொடக்கம் உள்ள எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. தொடக்கம் இல்லாத காரியங்களுக்குத்தான் முடிவு இல்லை. தேவனுக்குத் தொடக்கம் இல்லை; ஆகையால், அவருக்கு முடிவும் இல்லை. அந்த ஜீவன், அவருடைய சொந்த ஜீவன், நித்திய ஜீவன்... கிரேக்க வார்த்தையான "சோ (Zoe)", அது தேவனுடைய சொந்த ஜீவன் உங்களுக்குள் வந்துள்ளது, நீங்கள் தேவனின் ஒரு பகுதியாக மாறுகிறீர்கள். உங்களுக்கு நித்திய ஜீவன் உள்ளது, அதற்குத் தொடக்கமும் இல்லை முடிவும் இல்லை. அந்த நித்திய ஜீவனுடன் நீங்கள் மேலே செல்ல வேண்டும். நீங்கள் ஒருபோதும் அழிய முடியாது, ஏனென்றால் அது நித்தியமானது. தேவனுடைய வாக்குறுதிகள்

நித்தியமானவை. விசுவாசியுங்கள், நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

16 ஆனால் உங்களால் கற்பனை செய்ய முடியுமா (இப்போது சீக்கிரம்), தேவனுடைய குமாரனுக்குள் இருந்த அந்த மகா பெரிய வல்லமை... அவர் பிசாசைச் சந்தித்தபோது, அவர் அதை ஒருபோதும் பயன்படுத்தவில்லை. அது எவ்வளவு எளிமையானது என்பதைக் காட்டுவதற்காக அவர் பிதாவின் வார்த்தையை மட்டுமே எடுத்துக்கொண்டார். அந்த வார்த்தையின் வல்லமையைக் காட்டுவதற் காகவே, "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலேயும் பிழைப்பான்," என்று சொன்னார். மேலும் அவர், "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இது மீண்டும் எழுப்பப்படும்," என்று சொன்னார். அது என்ன? அந்த வாக்குறுதியைத் தந்த வார்த்தையை அவர் புசித்துக் கொண்டிருந்தார். கல்லறை அவரைப் பிடித்து வைக்க வழியே இல்லை. அதுதான் சரி. தேவனுடைய வார்த்தை.

தேவனுடைய நித்திய நோக்கத்தின் எளிமையையும், அவருடைய கிருபையின் இறைமையையும் உங்களால் பார்க்க முடிந்தால், உங்களால் கற்பனை செய்ய முடியுமா. ஆயிரக்கணக்கானோர் சுகமடையாமல் படுத்திருக்கும் போது, ஒரு மரத்தில் கனி இல்லை என்பதற்காக அந்தப் பெரிய வல்லமையைப் பயன்படுத்தி அதைச் சபிப்பதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? மனிதன் எப்படி தேவனுடைய சிருஷ்டிப்பின் ஒரு பகுதியாக இருக்கிறானோ, அதேபோல அந்த மரமும் தேவனுடைய சிருஷ்டிப்பின் ஒரு பகுதியாகும். ஆனால் மரங்கள் மற்றும் பூச்சிகள் மீதும் அவருக்குக் கரிசனை இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக... அவர் அவற்றின் மீதே கரிசனையாக இருந்தால், உங்கள் மீது அவர் எவ்வளவு அதிக கரிசனையாக இருப்பார்?

17 சிறிது காலத்திற்கு முன்பு, சுமார் நான்கு மாதங்களுக்கு முன்பு இருக்கும், எனக்கு அடுத்த வீட்டில் வசிக்கும் பிரதர் வுட் (Brother Wood); அவர் ஒரு யெகோவா சாட்சி (Jehovah Witness), தேவாலயத்திற்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டவர். போலியோவினால் கால்

முடங்கிப்போன ஒரு பையன் அவருக்கு இருந்தான். கென்டக்கியிலுள்ள லூயிஸ்வில்லில் (நாங்கள் அடுத்து அங்குதான் செல்கிறோம்), உயர்நிலைப் பள்ளி உள்விளையாட்டரங்கில் ஒரு கூட்டம் இருந்தது. அங்கே கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார். அவருடைய மனைவி மெத்தடிஸ்ட், அல்லது இல்லை, ஆண்டர்சன் சர்ச் ஆஃப் காட் (Anderson Church of God), ஃபர்ஸ்ட் சர்ச் ஆஃப் காட் (First Church of God) என்று அழைக்கப்படும் சபையைச் சேர்ந்தவர் என்று நான் நம்புகிறேன். இங்கே நீங்கள் அந்த நிகழ்ச்சியைப் பெறக்கூடும்: "நிழலான பசும்புல்வெளிகள் (Shady Green Pastures)." அது தேசம் தழுவிய ஒலிபரப்பு, பிரதர் மீக்லர் அதன் போதகர்.

பிறகு... பிரதர் வுட் இது போன்ற எதையும் நம்பவில்லை. ஆனால் கூட்டத்திற்கு வந்தபோது, அவர் ஏதோ ஒன்று நடப்பதைப் பார்த்தார்; அவர் இருதயம் விசித்திரமான அனல் கொண்டது.

நான் வெளிநாடுகளுக்குச் சென்று, திரும்பி வந்தேன். ஒரு இரவு, ஒஹியோவிலுள்ள

*கிளீவ்லேண்டில், எனக்கு ஒரு நகரத் தொகுதி தள்ளி அவர் உட்கார்ந்திருந்தார், பரிசுத்த ஆவியானவர் திரும்பி, "நீ, உன் பெயர் வுட், நீ கென்டக்கியில் உள்ள ஒரு குறிப்பிட்ட நகரத்தைச் சேர்ந்தவன். விசுவாசத்தின்படி நீ ஒரு யெகோவா சாட்சி. உனக்கு ஒரு பையன் இருக்கிறான்,*

*அவனுக்கு ஒரு கால் முடங்கி, மடங்கிப்போய் இருக்கிறது. உன் மனைவி ஒரு பயங்கரமான கட்டியினால் அவதிப்படுகிறாள்.* **கர்த்தர் உரைக்கிறதாவது** (THUS SAITH THE LORD), *அவர்கள் குணமாகிவிட்டார்கள்," என்று சொன்னார். அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர்கள் திரும்பி ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள், கூட்டம் தொடர்ந்தது. நிச்சயமாக, நான் தொடர்ந்து நடத்தினேன்.*

*சில நிமிடங்களில் அவள் தன் கைகளைத் தன் இடுப்புப் பகுதியில் வைத்து, "பேங்க்ஸ் (அது அவள் கணவர் பெயர்), இங்கே பார்; கட்டி எதுவும் இல்லை. டேவிட் எழுந்து நில்," என்று சொன்னாள். அந்தச் சிறுவன் குதித்து*

எழுந்தான், இரண்டு கால்களும் இயல்பாக மாறின.

18 அவர்கள் எனக்கு அடுத்த வீட்டில்தான் வசிக்கிறார்கள். அவர் தந்தை யெகோவா சாட்சிகள் சபையில் ஒரு வாசகர்... இப்போது, இங்கே யாரேனும் யெகோவா சாட்சிகள் இருந்தால், இது உங்களைப் பற்றிய குறை சொல்வதல்ல. ஆனால் அவர் தனது மகனைத் தங்கள் ஐக்கியத்திலிருந்து விலக்கி வைத்தார், பின்னர் அவன் வழிதப்பிப்போய் பைத்தியமாகி விட்டான் என்று சொன்னார். பின்னர் சில வருடங்கள், சுமார் இரண்டு வருடங்கள் கழிந்தன, திரு. வுட் எனக்கு அடுத்த வீட்டில் வசித்தார், ஒரு அற்புதமான அண்டை வீட்டாராக. ஒரு நாள் நான் கொஞ்ச நேரம் கொல்லைப்புறத்தில் புல் வெட்டிக் கொண்டிருந்தேன். அப்போது பிரதர் வுட் வீட்டுக்கு ஒரு கார் வந்தது, அவர் என்னை வரும்படி கூப்பிட்டார்.

அவர், "என் சகோதரர் லைல் (Lyle)-ஐ சந்தியுங்கள்," என்று சொன்னார்.

ஓ, எனக்கு மிகவும் இறுக்கமான ஒரு கைக்குலுக்கல் கிடைத்தது. "எப்படி இருக்கிறீர்கள் (Howdy)," என்று மட்டும் சொல்லிவிட்டு, அப்படி ஒரு பெரிய, வலுவான மனிதர் நடந்து சென்றார்.

நான், "எப்படி இருக்கிறீர்கள், திரு. வுட்? உங்களைச் சந்தித்ததில் நான் நிச்சயமாக மகிழ்ச்சியடைகிறேன். நான் உங்கள் சகோதரருக்கு நிச்சயமாக ஒரு சிறந்த நண்பன்," என்றேன்.

அவர், "ஆம்," என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார். உண்மையான தீவிர யெகோவா சாட்சி... எனவே சிறிது நேரத்தில், அவர் தொடங்கினார்... பேங்க்ஸ் இந்தக் கூட்டத்தில் தான் பார்த்த காரியங்களைப் பற்றி அவரிடம் சொல்லத் தொடங்கினார். அவர் அப்படியே எங்களுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு திரும்பினார்.

19 அச்சமயத்தில், கர்த்தருடைய கிருபை யினால், இழந்துபோன பாவியும், அவிசுவா சியுமான அவரிடம், "திரு. வுட், உங்கள் மனைவி கருப்பு முடியுள்ள பெண், ஆனால்

நீங்கள் ஒரு சிவப்பு முடியுள்ள பெண்ணுடன் சுற்றித் திரிகிறீர்கள். உங்களுக்கு இரண்டு சிறு பையன்கள் இருக்கிறார்கள்," என்று சொன்னேன்.

அவர், "பேங்க்ஸ் உங்களிடம் அதைச் சொன்னான் என்று நினைக்கிறேன்," என்று சொல்லி, மீண்டும் எனக்கு முதுகைக் காட்டினார்.

ஆனால் நான், "நேற்று இரவு நீங்கள் அவளுடன் வீட்டில் இருந்தபோது, ஒரு மனிதன் ஜன்னலைத் தட்டிக்கொண்டிருந்தான், நீங்கள் அவளை அங்கே அனுப்பினீர்கள். நல்லவேளை நீங்கள் போகவில்லை; அவன் உங்கள் மூளையைச் சிதறடித்திருப்பான் (சுட்டிருப் பான்)," என்று சொன்னேன்.

அவர், "ஓ, தேவனே என்மேல் இரக்க மாயிரும்," என்று சொல்லி தரையில் விழுந்து தன் வாழ்க்கையைக் கர்த்தராகிய இயேசுவிடம் ஒப்புக்கொடுத்தார்: எளிமை. நூற்றுக்கணக்கான நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் தரிசனத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்...

20 கீழே நதிக்கரையில், நாங்கள் அவருடைய வயதான அப்பாவுடன் மீன்பிடிக்கச் சென்றோம், அது அவருடைய தந்தையை எச்சரிக்கை அடையச் செய்தது. அவருடைய தந்தை, "அது போன்ற ஏதேனும் ஒன்று நடப்பதை நான் பார்த்தால், நான் நம்புவேன்," என்று சொன்னார். வழியில் அவர், "எங்களுடன் மீன்பிடிக்க வருகிறீர்களா?" என்று கேட்டார்.

நான், "இன்று மதியத்திற்குள் எனது அழைப்புகள் அனைத்தையும் முடித்துக்கொள்ள வாய்ப்புக் கிடைத்தால், காலையில் வருகிறேன்," என்று சொன்னேன். வழியில் மழை பெய்து கொண்டிருந்தது. நான் சொன்னேன், "ஒவ்வொரு (ஒரு தரிசனத்தைக் கண்டு)," நான் சொன்னேன், "நாங்கள் கடக்கும் ஒவ்வொரு ஓடையும் கலங்கியிருக்கும், ஆனால் நாங்கள் விஸ்டம் டாக்கிற்கு (Wisdom Dock) வரும்போது, அது அழகாகவும் நீலமாகவும் இருக்கும்." "நாங்கள் மீன்பிடிக்கப் போகிறோம், மாலை வரை நாங்கள் எதையும் பிடிக்கப் போவதில்லை. நான் எட்டு அல்லது பத்து பவுண்டு எடையுள்ள சுமார் இருபத்தைந்து மீன்களைப் பிடிப்பேன். நீங்கள் ஒன்றைப்பிடிப்பீர்கள், திரு. வுட்,

உங்கள் மகன் ஒன்றைப்பிடிப்பான். காலையில் நான் செதிலுள்ள ஒரு மீனைப் பிடிப்பேன், அதன் அளவுக்கு அது பெரியதாக இருக்கும். தேவன் உயிரோடிருக்கிறார் மற்றும் ஆளுகை செய்கிறார் என்பதை இதன் மூலம் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்," என்று சொன்னேன்.

அவர் பார்த்துவிட்டு, தன் மகனைப் பார்த்துக் கண் சிமிட்டிவிட்டுச் சென்றார். தேவன் சொன்னபடியே ஒவ்வொரு வார்த்தையும் துல்லியமாக நடந்தது. அது என்ன? தேவன் கிரியை செய்யும் வெறும் எளிமை.

21 இரண்டு வாரங்களுக்குப் பிறகு திரு. லைல், மற்றும் திரு. பேங்க்ஸ் மற்றும் நான் மீண்டும் அங்கு சென்றோம். அந்தத் துறைமுகம் எனது உறவினர்கள் சிலருக்குச் சொந்தமானது. நாங்கள் இரவு முழுவதும் தூண்டில் போட்டு மீன்பிடித்தோம், பல பெரிய மீன்களைப் பிடித்தோம். மறுநாள் காலையில் எங்களிடம் எதுவும் இல்லை. அன்று நாங்கள் எங்கள் தூண்டில்களில் இரை வைத்தோம், தள்ளி இருந்தோம், அது ஒருவிதமான மன ஓய்வாக இருந்தது. தூண்டிலில் மாட்டுவதற்காக நான்

சன்ஃபிஷ் (sunfishes) பிடித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று, படகின் ஓரத்தில் அமர்ந்து அந்தச் சிறிய ஃப்ளை லைன் (fly line) மூலம் இரைக்காகச் சிறிய சன்ஃபிஷை இழுத்துக்கொண்டிருந்தபோது, கர்த்தருடைய ஆவியானவர் இறங்கி வந்தார். நான், "**கர்த்தர் உரைக்கிறதாவது**; அங்கே நீங்கள் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள், ஏனெனில் எங்கோ ஒரு சிறிய மிருகம் மரித்தோரிலிருந்து எழுப்பப்படும், அது சம்பவிக்கும்," என்று சொன்னேன். நான் சுயநினைவுக்கு வந்தபோது, நான் என்ன சொன்னேன் என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

திரு. வுட் தனது தூண்டிலை கீழே வைத்துவிட்டு, "பிரதர் பிரான்ஹாம், அதைத் திரும்பச் சொல்லுங்கள்?" என்றார்.

நான், "அது என்ன சொன்னது?" என்று கேட்டேன்.

"சிறிய மிருகத்தைப் பற்றி," என்று அவர் சொன்னார்.

22 சரி, வீட்டில் ஏதோ நடக்கப்போகிறது என்று என் மனதில் நினைத்தேன். என்னிடம் பலதரப்பட்ட மக்கள் (mixed audience) உள்ளனர், ஆனால் நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பூனைக் குட்டிகள் என்றால் எங்களுக்குக் கொஞ்சம் சந்தேகம். அவை பரவாயில்லை என்று நினைக்கிறேன், ஆனால் நான்... பூனைகளை நான் அதிகம் விரும்புவதில்லை: பிரான்ஹாம் குடும்பத்தினர் யாரும் விரும்புவதில்லை. எனவே நாங்கள்... நாங்கள் ஒருபோதும் வீட்டில் ஒன்றை வளர்த்ததில்லை. என் சிறு பெண்ணும் பக்கத்து வீட்டுச் சிறுமியும் வந்தார்கள்.

அவள், "ஓ, அப்பா, யாரோ ஒரு ஏழைப் பூனைக்கு விஷம் கொடுத்துவிட்டார்கள்," என்று சொன்னாள். மேலும், "அது இங்கே நுரை தள்ளிக்கொண்டிருக்கிறது. நாங்கள் அதை வைத்துக் கொள்ள அனுமதிக்க மாட்டீர்களா?" என்று கேட்டு, "நாங்கள் அதை ஒரு பெட்டியில் வைத்திருக்கிறோம்," என்றாள்.

நான் பார்த்தேன். அதன் நிலையை நான் கண்டேன். எனவே நான், "சரி. அதைத் தொழுவத்தில் (shed) வையுங்கள்," என்றேன். நிச்சயமாக, மறுநாள் காலையில் எங்களிடம் பூனைக்குட்டிகளின் கூட்டம் இருந்தது. என் சிறு பையன், ஜோசப், கொஞ்சம் முரட்டுத்தனமான சிறிய பையன், அவன் ஒரு பூனைக்குட்டியைத் தூக்கி, அந்தச் சிறிய ஜீவனின் மூச்சுப் போகும் அளவுக்கு அதை மிகக் கடினமாக நசுக்கினான்.

அவன் அதைக் கீழே போட்டான், அதை என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. நான் நினைத்தேன், "உங்களுக்குத் தெரியும், ஒருவேளை கர்த்தர் அந்தச் சிறிய பூனைக் குட்டியை எழுப்பப்போகிறார். அது அநேகமாக இறந்துவிட்டது, அவர் அதை உயிரோடு எழுப்பப்போகிறார்."

சரி, சகோதரர் பேங்க்ஸ், "அது அற்புதமாக இருக்கும்," என்றார். மற்ற சகோதரர் வுட், அதாவது சகோதரர் லைல், இப்போதுதான் மனமாறியிருந்தார், நான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்திருந்தேன், அவர்

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருந்தார்.

23 எனவே, நாங்கள் அதை விட்டு விட்டோம், அன்று இரவு முழுவதும் மீன் எதுவும் பிடிக்கவில்லை. மறுநாள் காலையில் நாங்கள் ஒரு சிறிய வளைகுடாவிற்குள் படகைச் செலுத்தினோம், வீட்டிற்குச் செல்லச் சில பெரிய சன்ஃபிஷ்களைப் பிடிக்க முயற்சித்தோம். நான் அங்கே அமர்ந்து தூண்டில் போட்டுக் கொண்டிருந்தபோது, ஒரு மீன்கூட கடிக்க வில்லை. திரு. லைல் வுட் மிகவும் கடினமாக இழுத்தார், அவர் தனது தூண்டிலை வெகு நேரம் கிடக்க விட்டிருந்தார், அப்போது சுமார் இவ்வளவு நீளமுள்ள ஒரு சிறிய சன்ஃபிஷ், பார்ப்பதற்குப் பச்சையாகத் தெரியும் ஒரு சிறிய மீன்... நீங்கள் இங்கே அவற்றை "பிரீம் (bream)" என்று அழைப்பீர்கள் என்று நினைக்கிறேன். ஓ, அது அந்தப் பெரிய கொக்கியை (hook) தனது சிறிய வயிற்றுக்குள் முழுவதுமாக விழுங்கியிருந்தது.

எனவே திரு. வுட் நிமிர்ந்து பார்த்து, "அங்கே பாருங்கள், முழுவதுமாக உள்ளே

போய்விட்டது," என்றார். அவர் சுற்றியிருந்த தூண்டில் நூலைப் பிடித்து இழுத்தார். அவர் அப்படிச் செய்தபோது, அந்தச் சிறிய வயிறு வெளியே வந்தது, இரைப்பை; செவுள்களின் ஒரு பகுதி வெளியே வந்தது. அவர் கொக்கியை வெளியே இழுத்தார். அவர் அதைப் பார்த்துவிட்டுத் தண்ணீரில் வீசி எறிந்தார். அது இரண்டு மூன்று முறை துடித்தது, அதன் சிறிய துடுப்புகளை விரித்து, பக்கவாட்டில் திரும்பியது.

அவர், "சிறியவனே, உன் கதை முடிந்தது (you shot your wad)," என்றார். காற்று வீசிக்கொண்டிருந்தது, அந்தச் சிறிய மீனை மீண்டும் மிதக்கச் செய்தது... நாங்கள் அமர்ந்திருந்தோம்; நாங்கள் சிலவற்றைப் பிடிப்பதற்காக, ஓ, நான் சொல்வேன், அரை மணி நேரம் மீன்பிடித்தோம்.

நான்... "இது விசித்திரமாக இருக்கிறது, நாம் வேறு இடத்திற்குச் செல்வது நல்லது, ஏனென்றால் இங்கே மீன்கள் கடிக்கவில்லை," என்று சொன்னேன்.

சகோதரர் பேங்க்ஸ் வுட், "நான் இன்னும் ஒரே ஒரு முறை முயற்சி செய்கிறேன்," என்றார். அவர் சில இலைகளுக்குப் பின்னால் தனது தூண்டிலை வீசினார்.

24 சுமார் அரை மணி நேரமாக இறந்து போய், தன் சிறிய வயிறு வாய் வழியாக வெளியே வந்து, செவுள்கள் வெளுத்துப்போய், தண்ணீரில் குப்பைகளுக்கு நடுவே கிடந்த அந்தச் சிறிய மீனைப் பார்த்துக்கொண்டு நான் அங்கே அமர்ந்திருந்தேன். நான் அங்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தேன்.

இப்போது, இது புனைகதை போலத் தோன்றலாம், ஆனால் உண்மை புனைகதையை விட விசித்திரமானது. நான் அந்தச் சிறிய மீனைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, அந்த மலைகளின் பள்ளத்தாக்கில் ஒரு காற்று போன்ற சத்தம் வருவதைக் கேட்டேன். அது வேகமாகப் பாய்ந்து வந்தது. திடீரென்று அது என்னை மூடிக்கொண்டது. நான் அவர்களுடன் இந்த வேதவசனத்தைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது ஏதோ ஒன்று என்னிடம், "அந்தச் சிறிய மீனை கூப்பிடு," என்று சொன்னது. நான் அறிவதற்கு முன்பே...

சகோதரர் பேங்க்ஸ், "என்ன ஆச்சு, பிரதர் பிரான்ஹாம், நீங்கள் வெளுத்துப் போயிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

நான், "சிறிய மீனே, உன் சிருஷ்டிகராகிய இயேசு கிறிஸ்து உன்னை உயிர்ப்பிக்கிறார்," என்று சொன்னேன். நான் இந்தப் பரிசுத்த பீடத்தில், பரிசுத்த வேதாகமத்தின் மேல் நின்று என் சாட்சியாகச் சொல்கிறேன், தேவனே, அந்தச் சிறிய மீன்... தனக்குத்தானே... எவ்வளவு வேகமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு வேகமாகத் தண்ணீரில் நீந்திச் சென்றது, பரிபூரண நலத்துடன்.

திரு. லைல் அப்படியே படகில் சாய்ந்துவிட்டார். அவர், "சகோதரர் பிரான்ஹாம், அது எனக்கு ஒரு கடிந்துகொள்ளுதல், ஏனென்றால் நான் அந்தச் சிறிய ஜீவனைப் பார்த்து, 'உன் கதை முடிந்தது,' என்று சொன்னேன்," என்றார். நான்...?... அதற்காக."

நான் சொன்னேன், "இல்லை, சகோதரர் வுட். அவர் இங்கே எவ்வளவு எளிமையாகக் கிரியை செய்ய முடியும் என்பதை வெளிப்படுத்தினார். அவர் எல்லாவற்றின் மீதும்

கரிசனையுள்ளவர்: மீன்கள், ...?... அவர் அறுவடையின் தேவன். அவர் சர்வ நித்தியத்தின் தேவன். அது அவருடைய வார்த்தை.

25 ஏதோ ஒன்று முதலில் பேசியிருக்கா விட்டால், நான் ஒன்றும் இல்லாத அந்த மீனிடம் பேசியிருக்கவே மாட்டேன். அது என்ன? அவர் இரண்டாவதாகப் பேசினார், மனித உதடுகள் மூலமாகப் பரிசுத்த ஆவியானவரால் பேசப்பட்டபோது அது சர்வவல்லமையுள்ள தேவனுடைய சிருஷ்டிக்கும் வல்லமையாக மாறியது, ஏனென்றால் தேவன் அப்படிச் சொல்லியிருக்கிறார். அது அவ்வாறு நடைபெற்றதென்றால், கர்த்தராகிய தேவனு டைய எழுதப்பட்ட வார்த்தையின் மூலம் அவரால் இன்னும் எவ்வளவு அதிகமாகச் செய்ய முடியும், அது மனித உதடுகள் மூலமாகப் பேசப்பட்டது...?... "உன்னால் விசுவாசிக்கக் கூடுமானால்." எவ்வளவு எளிமை. அதைச் சந்தேகப்பட வேண்டாம். ஆனால் நீங்கள் சொல்வது சம்பவிக்கும் என்று விசுவாசியுங்கள்; நீங்கள் சொல்வது உங்களுக்குக் கிடைக்கும். அதை விசுவாசியுங்கள், என் நண்பரே. இப்போது, நாம் ஜெபம் செய்வோம்.

26 ஓ நித்திய தேவனே, ஒரு அணு இருப்பதற்கு முன்பே, விடிவெள்ளி நட்சத்திரங்கள் ஒன்றாகப் பாடுவதற்கு முன்பே பரலோகத்தில், ஜீவனுள்ள தேவனின் பெரிய ஆவியானவர் விண்வெளி மற்றும் நித்தியம் முழுவதையும் மூடியிருந்தீர். உம்மால் சிருஷ்டிக்கப் படும் ஒரு சிருஷ்டிப்பு உம்மைத் தொழுதுகொள்ள வேண்டும் என்று அங்கே நீர் உம்முடைய இருதயத்தில் தீர்மானித்தீர். யுகங்கள் முழுவதிலும் நீர் எப்படி நீதிமான் களையும், நியாயப்பிரமாணங்களையும், தீர்க்க தரிசிகளையும், இறுதியாக உமது குமாரனையும் அனுப்பினீர். அவர், "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்: நான் மறுபடியும் வருவேன், உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களுடனே கூட, உங்களுக்குள்ளும் இருப்பேன். நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்; இதைவிடப் பெரிய கிரியைகளையும் செய்வீர்கள், ஏனென்றால் நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறேன்," என்று சொன்னார். மேலும் வேதாகமம் எழுதுகிறது, பெரிய எபிரெய நிருப ஆசிரியர் சொன்னது போல, "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்".

ஓ, பெரிய யேகோவா, சீக்கிரம் வரப் போகிறவரே, இரட்சிப்பிற்கான ஜெபத்தைக் கேட்கக் கூடாதபடி உமது முகத்தை மறைத்துக் கொள்ளும் அளவுக்கு எங்கள் தேசத்தின் பாவங்களை நோக்கிப் பார்த்தவரே. இன்று, நேபுகாத்நேச்சார் தன் தோட்டத்தில் நவீன ராக்-அண்ட்-ரோல் (rock-and-roll) நடனத்தை வைத்துக்கொண்டு, பாபிலோனின் பெரிய மதில் களுக்குப் பின்னால் அவர்கள் பாதுகாப்பாக இருப்பதாக நினைத்துக்கொண்டிருந்ததைப் போல இருக்கிறது; ஆனால் நதியின் போக்கை மாற்றுவதற்காக ஒரு அகழி வெட்டப்பட்டுக் கொண்டிருந்ததை அவன் அறியாதிருந்தான். அவர்கள் தேவனைப் புறக்கணித்தபடியால், எதிரிகள் வாசலில் நின்று காவலர்களைக் கொன்றுவிட்டு, தெருக்களிலே பெண்களைக் கற்பழித்துக்கொண்டிருந்தார்கள்.

27 ஆனால் ராணி ஓடிவந்து, "கலங்காதிரும், இயற்கைக்கு அப்பாற்பட்டதை அறிந்து கொள்ளக்கூடிய ஒரு மனிதர் இருக்கிறார்," என்று சொன்னது போல. ஓ ஆண்டவரே, இன்றிரவு எங்கள் மத்தியில் ஒருவர் இருப்பதற்காக, இயற்கைக்கு அப்பாற்பட்ட

பரிசுத்த ஆவியானவர் இருப்பதற்காக நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இயற்கைக்கு அப்பாற்பட்ட மண்டலங்களுக்குள்ளாக நீர் ஒரு சபையை அழைத்துக்கொண்டிருக்கிறீர். வானத்திலே உள்ள ஸ்புட்னிக்குகள் (sputniks), இந்த காரியங்கள் எல்லாம் அழிவு நெருங்கிவிட்டது என்பதைக் காட்டுகின்றன. உபத்திரவ காலம் வருவதற்கு முன்பே சபை போய்விடும் என்று எங்களுக்குப் போதிக்கப்பட்டிருக்கிறது.

மழை பெய்வதற்கு முன்பே நோவா பேழைக்குள் சென்றான். தேவதூதன் லோத்துவிடம், "சீக்கிரம் அங்கே போ, நீ அங்கே போய்ச் சேருமளவும் நான் ஒன்றும் செய்யக்கூடாது," என்று சொன்னான். ஓ, ஆண்டவரே, அந்தக் காலம் வருவதற்கு முன்பே சபை போய்விடும். சுவரில் எழுதப்பட்ட கையெழுத்தையும், பூமியைச் சுற்றிவரும் ஸ்புட்னிக்குகளையும் நாம் பார்க்கும்போது; உலகம் நடுக்கம் நிறைந்த நிலையில் இருக்கும்போது, உமது சபையின் எடுத்துக் கொள்ளப்படுதல் (rapture) எவ்வளவு நெருக்கமாயிருக்கிறது? ஏதேனும் செய்யப்படுவதற்கு

முன்பே அவர்கள் இங்கிருந்து போய்விட வேண்டும்.

ஓ ஆண்டவரே, இன்றிரவு உமது திவ்விய பிரசன்னத்தின் விசேஷித்த ஆசீர்வாதத்தை உமது ஜனங்களுக்கு அருளுவீராக. நாளை என்ன நடக்கும் என்று எங்களுக்குத் தெரியாது; ஆனால் நாளை யாரின் கையில் இருக்கிறது என்பதை நாங்கள் அறிவோம். ஆகையால், தேவனே, உமது அன்பினால் ஒரு இரட்சகரை எங்களுக்கு வெளிப்படுத்திய உமது கிருபையினால், இன்றிரவு பரிசுத்த ஆவியின் வடிவில் அவரை மீண்டும் அனுப்புவீராக என்று நாங்கள் ஜெபிக்கிறோம். "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்," என்று நீர் சொல்லியிருக்கிறீர். ஆண்டவரே, மரத்தின் இந்தக் கொடிகளுக்குள் வாரும். உம்மோடு இணைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரையும் உயிர்ப்பியும், உமது உயிர்த்தெழுதலின் அடையாளங்களையும் அற்புதங்களையும் காண்பியும், இதனால் மக்களின் விசுவாசம் பெருகி, அவர்கள் நோக்கிப்பார்த்துப் பிழைப்பார்களாக. உமது நேச குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென்.

28 இப்போது, எனது அன்பான நண்பர்களே, நமது நேரம் மிக எளிதாகக் கடந்து செல்கிறது. இப்போது, இன்றிரவு இது தவறா அல்லது சரியா என்று கண்டுபிடிக்கப்பட வேண்டிய ஒரு நேரம் மீண்டும் வருகிறது. நான் பலமுறை முகமதியரின் வேதத்தை (அவர்கள் எண்ணிக்கையில் நம்மை விட மூன்று மடங்கு அதிகம்), முகமதியரின் வேதத்தை (குரான்) ஒரு கையிலும், கர்த்தராகிய தேவனுடைய வேதாகமத்தை இந்தக் கையிலும் பிடித்துக்கொண்டு, "ஒன்று சரி, மற்றொன்று தவறு. சவால் விடுங்கள்," என்று சொல்லியிருக்கிறேன். யேகோவா ஒருபோதும் தோல்வியடைந்ததில்லை. அவரால் தோல்வியடைய முடியாது.

இப்போது, இங்குள்ள நோயாளிகளே மற்றும் தேவையுள்ளவர்களே, தேவன் ஏற்கனவே உங்கள் சுகத்தைக் கிரயத்துக்கு வாங்கிவிட்டார். நீங்கள் ஒவ்வொருவரும் ஏற்கனவே குணமாகிவிட்டீர்கள். சுகம் என்பது கல்வாரியில் முடிக்கப்பட்ட ஒரு செயல். கிறிஸ்து எதற்காக மரித்தாரோ அந்த ஒவ்வொரு மீட்பின் ஆசீர்வாதமும் கல்வாரியில் முடிக்கப் பட்டது. அதற்கான விலை செலுத்தப்பட்டு

விட்டது. பிசாசு உங்களை வெறும் மிரட்டுகிறான். இயேசு உயிரோடிருக்கிறார்.

"அவர் பத்தொன்பது நூறு ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார், நாம் அவரைக் கடைசியாகப் பார்த்தது அவ்வளவுதான்," என்று சொல்லும் சில இறையியலாளர்களின் கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை.

நாம் அவரைக் கடைசியாகப் பார்ப்பது அதுதான் என்று அவர் சொல்லியிருந்தால், நாம் அதை அப்படியே நம்பலாம். ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை. அவர், "இன்னும் கொஞ்சக்காலத்தில் உலகம் என்னைக் காணாது. ஆனாலும் நீங்கள் என்னைக் காண்பீர்கள்: ஏனென்றால் நான் உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களுடனேகூட, உங்களுக்குள்ளும் இருப் பேன். நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்," என்று சொன்னார். கொடிகள்தான் கனிகளைத் தாங்குகின்றனவே தவிர, இனி திராட்சச்செடி அல்ல. ஆனால் திராட்சச் செடியினால் உயிரூட்டப்படும் வரை கொடியால் கனி கொடுக்க முடியாது.

29 இப்போது, அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருந்தால்; அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, கிரியை களைச் செய்வதற்குத் தேற்றரவாளராகிய பரிசுத்த ஆவியானவரைத் திரும்ப அனுப்பியிருந்தால். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவே. வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரரோடு இருந்த அக்கினி ஸ்தம்பம் அவரே. கலிலேயாக் கடலோரத்தில் நின்று, "ஆபிரகாம் உண்டா கிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்," என்று சொன்னவர் அவரே. எரியும் முட்செடியில் இருந்த அக்கினி ஸ்தம்பம் அவரே.

மேலும் அவர், "நான் அந்த ஒளியிலிருந்து, அதாவது தேவனிடமிருந்து வந்தேன். நான் அந்த ஒளிக்கு, அதாவது தேவனிடத்திற்குத் திரும்பிச் செல்கிறேன்," என்று சொன்னார். அவர் உயிர்த்தெழுந்த பிறகு பவுல் தமஸ்கு செல்லும் வழியில் அவரைச் சந்தித்தபோது, அங்கே அவர் பவுலைக் கீழே விழச்செய்த ஒரு ஒளியாக இருந்தார்.

வேறு யாரும் அதை பார்க்கவில்லை. பவுல் அதைப் பார்த்தான். அந்தப் போர்வீரர்கள் தங்களால் எதையேனும் பார்க்க முடியுமா என்று

தேடினார்கள்; அவர்களால் எதையும் பார்க்க முடியவில்லை. ஆனால் அது பவுலுக்கு மிகவும் பிரகாசமாக இருந்ததால் அது அவன் கண்களைப் குருடாக்கியது. நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறது. தேவன் ஒருவரிடமிருந்து தம்மை மறைத்துக்கொள்ளவும், மற்றவருக்குத் தம்மை வெளிப்படுத்தவும் முடியும். அது தேவன். "ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயே ஆகும்." நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறது.

30 இப்போது, அவர் மீண்டும் அந்த ஒளிக்குத் திரும்பியிருக்கிறார். நீங்கள் பார்க்கும் இந்தப் புகைப்படம் அதுதான், இது சில ஆண்டுகளாக விஞ்ஞானிகளைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர் இங்கே இருக்கிறார். அது ஒரு ஆவி என்றால், அது என்று உங்களுக்குத் தெரியும். ஜான் டிலிஞ்சரின் (John Dillinger) ஆவி எதைத் தாங்கியிருக்கும்? துப்பாக்கிகள், கொலைகள். ஒரு கலைஞனின் ஆவி எதைத் தாங்கியிருக்கும்? தூரிகையின் தீட்டுதலை. சாங்கியின் (Sankey) ஆவி எதைத் தாங்கியிருக்கும்?. ஆபிரகாம் லிங்கனுக்கு

முன்னால் பாடிய, புத்தகத்திலுள்ள ஸ்வரங்கள் கூடத் தெரியாத அந்த இனிமையான குரலை. எந்தவொரு பொருளின் ஆவியும் எப்படி இருக்கும்? அந்த ஆவியின் கனிகளைக் கொடுக்கும், அது என்னவோ அதை வெளிப்படுத்தும்.

கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவைப் போலவே செயல்படுவார், கிறிஸ்து செய்த காரியங்களையே செய்வார். அவருடைய கிருபை நமக்கு எப்படிப்பட்டது என்பதற்கு நாம் எவ்வளவு மோசமான உதாரணமாக இருக்கிறோம்.

31 இப்போது, நாம் கூட்டத்திற்குச் செல்லும்போது, நீங்கள் சற்று அமைதியாக இருந்தால். நான் பெரிய பிரசங்கி இல்லை. என்னை நான் வகைப்படுத்திக் கொள்ள முடியாது. நான்...?... ஒரு பிரசங்கி என்று சொல்கிறேன், ஏனென்றால் இந்த ஊழியர்களுக்கு இருப்பதைப் போன்ற கல்வி மற்றும் இதர காரியங்கள் எனக்கு இல்லை. என் வரம் தரிசனங்களைக் காண்பது.

சபையில் ஐந்து அலுவலகங்கள் தேவனால் நியமிக்கப்பட்டு சபையில் வைக்கப்பட்டுள்ளன என்று வேதாகமம் சொல்கிறது-அலுவலகப் பொறுப்பாளர்கள். முதலாவது அப்போஸ் தலர்கள், தீர்க்கதரிசி, போதகர்கள், சுவிசேஷ கர்கள், மேய்ப்பர்கள். இவை தேவனுடைய முன்நிர்ணயம். முன்குறித்தலின்படி, முன்னறி வின் படி அவர் அதைக் கண்டார், ஒவ்வொரு யுகத்திற்கும் ஏற்றபடி சபையில் வைத்தார்.

உள்ளூர் சபையில் சரீரம் முழுவதிலும் செயல்படும் ஒன்பது ஆவிக்குரிய வரங்கள் உள்ளன: அந்நிய பாஷை பேசுதல், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல், மற்றும் கர்த்தருடைய பல்வேறு விதமான கிரியைகள்; தீர்க்கதரிசன வரம்.

இப்போது, ஒரு தீர்க்கதரிசிக்கும் தீர்க்கதரிசன வரத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. தீர்க்கதரிசன வரம் ஒருவரின் மேல் இருக்கலாம், பின்னர் மற்றொருவர் மேல் இருக்கலாம்; சபை அதை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு அது மூன்று நியாயாதிபதிகளால் நிதானிக்கப்பட வேண்டும். ஆனால் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசி அப்படி இல்லை, அவர்

தீர்க்கதரிசியாகவே பிறந்தார். அவர் எப்போதும் தீர்க்கதரிசியாகவே இருந்தார். அவரிடம் தேவனுடைய வார்த்தை இருந்தது. அவர் இறந்த பிறகும், அவர் இன்னும் ஒரு தீர்க்கதரிசியாகவே இருக்கிறார். அது உங்களைத் தொந்தரவு செய்ததா?.

32 எந்தூரின் குறிசொல்லுகிறவள் சாமுவேலின் ஆவியை வரவழைத்தபோது, அவர் இன்னும் தனது தீர்க்கதரிசி அங்கியில் இருந்தார், அவர் இன்னும் ஒரு தீர்க்கதரிசி யாகவே இருந்தார். மறுநாள் என்ன நடக்கும் என்று அவர் அவளுக்குச் சொன்னார். நிச்சயமாக. மரணம் ஒரு மனிதனை மாற்றுவதில்லை; அது அவனது வசிப்பிடத்தை மட்டுமே மாற்றுகிறது. நீங்கள் இங்கே இறக்கும்போது ஒரு பாவியாக, ஒரு அவிசுவாசியாக இருந்தால்... ஓ, நீங்கள் ஒரு விசுவாசமான சபை உறுப்பினராக இருக்கலாம். ஆனால் நீங்கள் உங்கள் அவிசுவாசத்தில் இறந்தால், ஆக்கினைக்குள்ளாவதைத் தவிர உங்களுக்கு வேறு எதுவும் மிஞ்சாது. நீங்கள் விசுவாசத்தில் இறந்தால், அதுதான் உங்களை இரட்சிக்கிறது. உங்கள் விசுவாசம் உங்களை

இரட்சித்தது. நீங்கள் நித்திய ஜீவனுக்குச் செல்ல வேண்டும், ஏனென்றால் அது நித்திய ஜீவன், அதாவது தேவன் மேலுள்ள உங்கள் விசுவாசம், அதே காரியம்.

கர்த்தர் இன்றிரவு நமக்குக் கிருபை செய்வாராக, கூட்டத்தின் மீதமுள்ள இந்த அடுத்த சில நிமிடங்களில் அவர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

33 [சகோதரர் பிரான்ஹாம் ஜெப அட்டைகளைப் பற்றி ஒருவரிடம் பேசுகிறார்] ...?... ஜெப அட்டைகள் (prayer cards)...?... K? K, இன்றிரவு கூட்டத்திற்காக எங்கள் ஜெப அட்டை K கொடுக்கப்பட்டதாக அவர் சொன்னார். இந்த அட்டைகள் ஏன் கொடுக்கப்படுகின்றன? நீங்கள் வரிசையில் நிற்பதற்காக மட்டுமே; அவ்வளவுதான். இங்கே எத்தனை பேர் வியாதியோடு இருக்கிறீர்கள், ஜெபிக்கப்பட விரும்புகிறீர்கள்? கட்டிடம் முழுவதும், எல்லா இடங்களிலும் உங்கள் கைகளை உயர்த்துங்கள். இதோ இருக்கிறீர்கள். சுமார் இருநூறு பேர், முன்னூறு பேர்.

எத்தனை அட்டைகள் கொடுத்தீர்கள்? ஐம்பது. சரி, இந்த முன்னூறு பேரில் இப்போது யார் முதலில் வரப்போவது? அதான் விஷயம். நான், "இந்தப் பெண்மணி வரட்டும், இந்தப் பெண்மணி வரட்டும்," என்று சொன்னால், அது பாரபட்சம் காட்டுவது போலாகும். அவர்கள் அந்த அட்டைகளைக் கீழே கொண்டு வந்து உங்கள் முன்னிலையில் அவற்றை ஒன்றாகக் கலக்கி, நேராகச் சுற்றி வந்து, இங்கே உங்களுக்கு ஒரு அட்டையைக் கொடுக்கிறார்கள்; ஏனென்றால் யாருக்கும் எங்கே என்று தெரியாது...

உங்களுக்கு எண் 1 கிடைக்கலாம், உங்களுக்கு அடுத்த வீட்டில் உள்ளவருக்கு ஆறு கிடைக்கலாம், அடுத்தவருக்கு மூன்று கிடைக்கலாம். புரிகிறதா? அப்படியிருக்க, நீங்கள் எங்கிருந்து அழைக்கப் போகிறீர்கள்? ஒன்று, மூன்றா? அவருக்குத் தெரியாது. எனக்குத் தெரியாது. யாருக்கும் தெரியாது. இப்போது எனக்குத் தெரியாது. நான் இங்கே நிற்கிறேன், கர்த்தர் என் இருதயத்தில் எதைப் போடுகிறாரோ, அங்கிருந்து அழைப்பேன். எனக்கு இன்னும் தெரியாது.

இப்போது, நீங்கள் மேலே வரும்போது, நீங்கள் குணமாகப் போகிறீர்கள் என்பதற்கு அது அறிகுறி அல்ல. அது சபையினரிடையே பரிசுத்த ஆவியானவர் அசைவாடச் செய்கிறது. பரிசுத்த ஆவியானவர் அசைவாடத் தொடங்கும்போது, ஜெப அட்டைகள் இல்லாதவர்களிடமும் அவர் நேரடியாகச் செல்கிறார். புரிகிறதா?

34 இப்போது, இயேசு கிறிஸ்து, அவர் பூமியில் இருந்தபோது... நம் மத்தியில் ஒரு அந்நியர் இருக்கலாம். இயேசு பூமியில் இருந்தபோது, "பிதா எனக்கு முதலில் என்ன செய்ய வேண்டும் என்று காண்பிக்கும் வரை நான் ஒன்றும் செய்வதில்லை," என்று சொன்னார். பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டுபிடித்தபோது பாருங்கள், இயேசு பேதுருவிடம் என்ன சொன்னார்... பேதுரு நடந்து வந்தபோது அவன் பெயர் என்னவென்று அவனிடம் சொன்னார், "உன் பெயர் சீமோன், நீ யோனாவின் குமாரன்," என்றார். அது அவனை ஆச்சரியப்படுத்தியது. அவர், "இனிமேல் நீ கேபா (பொருள், சிறு கல்) என்று அழைக்கப்படுவாய்," என்றார்.

பிலிப்பு மேலே வந்து, போய் நாத்தான்வேலை (மலையைச் சுற்றி முப்பது மைல் தூரம்) அழைத்துக்கொண்டு திரும்பி வந்தான். அவன் அவனைக் கண்டுபிடித்தபோது, அவன் ஒரு மரத்தின் அடியில் இருந்தான்; "வா, யோசேப்பின் குமாரனாகிய நாசரேத்தூரான இயேசுவைக் கண்டோம், வந்து பார்," என்று சொன்னான்.

அவன், "நாசரேத்திலிருந்து ஏதாகிலும் நன்மை வரக்கூடுமா?" என்று கேட்டான்.

அவன், "வந்து பார்," என்றான். யாரேனும் கொடுக்கக்கூடிய சிறந்த பதில் அதுதான். "வந்து பார்." வார்த்தையின்படி அதைச் சோதித்துப் பார்.

35 இப்போது, நினைவில் கொள்ளுங்கள், லட்சக்கணக்கான அமெரிக்கர்கள் தங்கள் அழிவைச் சந்திக்கப் போகிறார்கள்...?... இன்றிரவு இந்த முழு தேசமும் ஐந்து நிமிடங் களுக்குள் அழிக்கப்படுவதற்குத் தடையென்ன? அதைப்பற்றி மற்ற நாள் நாடு தழுவிய ஒலிபரப்பில் விஞ்ஞானம் என்ன சொன்னது? நாம் ரஷ்யாவை விட ஐந்து ஆண்டுகள்

பின்தங்கியிருக்கிறோம். அவர்களிடம் ஸ்புட்னிக் உள்ளது, அதில் அவர்கள் ஒரு மனிதனை, டஜன் கணக்கானவர்களை ஏற்றிக்கொண்டு, வானத்தில் மேலே அனுப்பி, இந்த ஐக்கிய மாகாணங்களுக்கு மேலே வந்து, "சரணடையுங்கள், அல்லது சில நிமிடங்களில் தூளாகிப் போங்கள்," என்று சொல்ல முடியும். நிச்சயமாக, நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நாம் சரணடைவோம்.

என்ன நடக்கும்? ரஷ்ய வீரர்கள் லட்சக்கணக்கில் உள்ளே புகுந்து, தெருக்களில் ஓடி, பெண்களைப் பிடித்து, இளம் பெண்களை, காதலிகளை, யாராக இருந்தாலும் கற்பழிப்பார்கள். அவர்களுக்கு அது ஒரு பொருட்டே அல்ல. நிச்சயமாக. அவர்கள் கம்யூனிஸ்டுகள், இரக்கமற்றவர்கள். என்ன நடக்கும்? ஒரு நல்ல வீட்டிற்குள் நேராகச் சென்று, உங்களை வெளியே உதைத்துத் தள்ளுவார்கள். அவர்கள் அதைத் தாங்களே பயன்படுத்திக் கொள்வார்கள். அது அப்போது ரஷ்யாவுடையது, நாம் ஒரு அடிமை நாடு (satellite).

நான் உங்களுக்குச் சொல்கிறேன்: சபை அதைப் பார்க்காது. அது வரும்போது அவள் போய்விடுவாள். அது **கர்த்தர் உரைக்கிறதாவது** (THUS SAITH THE LORD)...?... அந்த நேரத்திற்குள் அது போய்விடும். இயேசு வருகிறார், அதனால்தான் இந்த அடையாளங்கள்... என்ன...

36 நான் மறுநாள் என் சகோதரர்கள் சிலரிடம் சொன்னேன், "எனக்குப் புரியவில்லை.". இப்போது, இது கொஞ்சம் தனிப்பட்ட விஷயம். நான் இதை இதுவரை பொதுவெளியில் சொன்னதாக எனக்கு நினைவில்லை, ஆனால் இப்போது நான் சொல்லப்போகிறேன். என் வாழ்க்கையில் இதற்கு முன்பு நான் இதை பொதுவெளியில் சொன்னதில்லை. புரிகிறதா?. இதைச் சரியாகச் சொல்வதற்கு... உங்களுக்குப் புரியும்படி நான் இதைத் தெளிவாகச் சொல்கிறேன்.

அன்றொருநாள் நான், "என்ன நடக்கப் போகிறது, ஆண்டவரே?" என்று வியந்து கொண்டிருந்தேன். இந்த காரியங்களை நான் எப்படி அறிவேன். அந்தப் புகைப்படம் ஒன்றே

உலகம் முழுவதையும் அசைத்திருக்க வேண்டும், ஆனால் ஒரு செய்தித்தாள் கூட அதை வெளியிடவில்லை. ஏன்? இந்தக் குணமாக்குதல்கள் மற்றும் அற்புதங்கள் மூலம் நடைபெறும் தேவனுடைய எளிமை, நடைபெற்ற இந்தப் பெரிய காரியங்களைப் பாருங்கள். அது ஏன் நடந்தது? அது எப்படி சம்பவித்தது? மக்களால் ஏன் அதைப் பார்க்க முடியவில்லை?.

37 நான் என் அமெரிக்க மக்களிடம் கூட்டத்திற்குச் சென்று, அவர்களிடம் பேசுகிறேன். இறையியலாளர்களை எடுத்துக் கொள்ளுங்கள், அவர்களைத் தங்கள் அலுவலகத்திற்குத் திரும்ப அழைத்துச் சென்று வேதாகமத்தைக் கீழே வையுங்கள். அதை வெளியே எடுத்து, "இங்கே, இதைப் பாருங்கள். அவர் வாக்குறுதி அளித்தது இதுதானா இல்லையா என்று பாருங்கள்," என்று சொல்லுங்கள். பின்னர் கர்த்தராகிய இயேசு வந்து அதை உறுதிப்படுத்துகிறார்.

மக்கள், "ஆமாம், உங்களுக்கு," என்கிறார்கள். அவ்வளவுதான். புரிகிறதா? "அவர்களுக்குக் கண்கள் இருந்தும் காணாதிருக்

கிறார்கள்; காதுகள் இருந்தும் கேளாதிருக் கிறார்கள்".

என் அன்பு நண்பரே, நான் உங்களை எவ்வளவு நேசிக்கிறேனோ அவ்வளவுக்கு நான் உறுதியாக இருக்கிறேன்... பில்லி சில நிமிடங்களுக்கு முன்பு வந்து, "அப்பா, உங்களுக்காக ஒரு அன்புக் காணிக்கை (love offering) எடுத்திருக்கிறார்கள்," என்று சொன்னான். நீங்கள் அதைச் செய்திருக்க வேண்டியதில்லை, சகோதரர் ஹட்சின்ஸ். எனக்குத் தேவையில்லை...

நிச்சயமாக, நான் ஒரு ஏழை மனிதன். ஆனால் என் பிள்ளைகளுக்கு உணவளிப்பது எது என்று உங்களுக்குத் தெரியுமா? உங்கள் பணம். எனக்கு ஒரு கோட் சூட் (suit) வாங்கித் தருவது எது? உங்கள் பணம். நான் ஏன் இங்கே வரவேண்டும்? ஏன்... நீங்கள் இல்லாவிட்டால் நான் வெறும் காலியான இருக்கைகளுக்குப் பிரசங்கிப்பேன். அப்படியானால் யாராவது என்னை அவ்வளவு நேசித்தால், நான் அந்த நபரிடம் முழு மனதுடன் உண்மையாக இருக்க வேண்டாமா?. அதற்காக நான் கிறிஸ்துவிடம்

பதில் சொல்லப் போகிறேன். நான் முழு மனதுடன் உண்மையாக இருக்க வேண்டும்.

**38** கவனியுங்கள். இந்தக் காரியங்களை ஏன் பார்க்க முடியவில்லை? அப்போது எனக்கு இது தோன்றியது. FBI-ன் தலைவரான ஜார்ஜ் ஜே. லேசி (George J. Lacy) எனக்கு அந்தப் புகைப்படத்தைக் கொடுத்தபோது, அவர், "திரு. பிரான்ஹாம், என்றாவது ஒரு நாள் இந்தப் படம் பத்து சென்ட் கடை அலமாரிகளில் விற்கப்படும், ஆனால் நீங்கள் உயிருடன் இருக்கும்போது அல்ல," என்று சொன்னார். அது எப்போதும் என் மனதில் நின்றது. ஏன்?

நான், "ஏன் ஐயா?" என்று கேட்டேன்.

அவர், "உயில் எழுதியவர் (testator) இறக்கும் வரை அந்த உயில் (testament) அமுலுக்கு வராது. அது ஒரு அந்நிய வழிபாட்டைத் தொடங்கும்," என்று சொல்லிவிட்டுத் திரும்பி நடந்து சென்றார்.

அது என் மனதில் நின்றது. சில மாதங்களுக்கு முன்பு நான் படித்துக் கொண்டிருந்தேன், அப்போது எனக்கு இது

தோன்றியது. கவனியுங்கள். தேவனுடைய நீதி... யார் வருவார்கள், யார் வரமாட்டார்கள் என்பதைத் தேவன் முன்னறிவின் மூலம் அறிவார். உங்களுக்கு அது தெரியும். இந்தச் சிறந்த ஆசிரியர்களால் இங்கே உங்களுக்குப் போதிக்கப்படுகிறது.

39 [ஒலி நாடாவில் காலியிடம்] கவனி யுங்கள், இங்கே அமர்ந்திருக்கும் நீங்கள், இதைக் கேட்கிறீர்களா? [ஒலி நாடாவில் காலியிடம்], எனவே...?... அவர், "என் பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் எவனும் என்னிடத்தில் வரமாட்டான்," என்று சொன்னார். தேவன் இழுத்துக்கொள்ளுதல் செய்ய வேண்டும், அப்போது நீங்கள் தேவனால் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட அன்பளிப்புகள்.

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பெரிய எலியா பூமியில் இருந்தபோது, அவர் போகும்வரை மக்கள் அவரை அங்கீகரிக்க வில்லை. எலிசா அவர் இடத்தைப் பிடித்தார். அவர்கள் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள், அவர் வாலிப வயதிலேயே வழுக்கைத் தலையானதால் அவரை மொட்டைத்தலையன் என்று அழைத்தார்கள். அவர் எடுத்துக்கொள்ளப்பட்டு

பரலோகத்திற்குச் செல்லும்வரை, அல்லது மேலே எடுக்கப்படும் வரை அவர் உண்மையில் யார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

யோவான் ஸ்நானகனின் தலை துண்டிக்கப் படும் வரை அவன் யார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. சீஷர்களுக்குக் கூட அவனைத் தெரியவில்லை. சீஷர்கள், "எலியா முந்தி வரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லு கிறார்களே, அதெப்படி?" என்று கேட்டார்கள்.

இயேசு, "அவன் ஏற்கனவே வந்துவிட்டான், நீங்கள் அவனை அறியவில்லை," என்று சொன்னார். அது எப்படிக் கடந்து சென்றது என்று பார்த்தீர்களா?

ஆனால் தேவனுடைய நீதி-தாம் அறிந்திருந்தவர்களை அவர் அழைத்தார். "தம்முடைய முன்னறிவின்படி எவர்களை முன்குறித்தாரோ, அவர்களை அழைத்தி ருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ, அவர்களை நீதிமான்களாக்கியிருக்கிறார்; எவர்களை நீதிமான் களாக்கியிருக்கிறாரோ, அவர்களை மகிமைப் படுத்தியுமிருக்கிறார் (பாருங்கள்), எதை அவர் முன்னறிந்தாரோ. உன்னிப்பாகக் கவனியுங்கள்,

அப்போது தான் விசுவாசிப்பதற்கான விசுவாசத்தைப் பெறுவீர்கள்.

இயேசு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மீண்டும் உயிர்த்தெழும் வரை அவர் யார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அப்படியானால் நாம் வேதாகமத்தை எடுத்துக்கொள்வோம்.

40 என் கத்தோலிக்க நண்பர்களே, என் பின்னணி கத்தோலிக்கம். கத்தோலிக்கப் புனிதரான செயிண்ட் பேட்ரிக் (Saint Patrick) பற்றி நாம் பேசினோம். இன்றிரவு நான் எவ்வளவு கத்தோலிக்கனோ அவ்வளவுதான் அவரும் கத்தோலிக்கராக இருந்தார்.

ஆனால் வேறு எந்தச் சபையும் இல்லை... அவர்கள் அவரை அழைத்தார்கள், ஆனால்... அவர் அயர்லாந்திலிருந்து பாம்புகளை விரட்டும் வல்லமை பெற்றிருந்தபோது என்ன நடந்தது, புராணக்கதைகள், மற்றும் பல, நம்மிடம் ஒரு... பின்னர் அவர் இறந்த பிறகு, சபை அவரை அங்கீகரித்து, அவர் போன பிறகு அவரைப் புனிதராக (saint) அறிவித்தது.

கையில் வேதாகமத்துடன் நடந்து செல்லும் பிரசங்கியான அசிசியின் புனித பிரான்சிஸைப் (Saint Francis of Assisi) பாருங்கள். அவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார், பறவைகள் கூட்டம் கீச்சிட்டன; அவர், "சகோதரிகளே, நான் சுவிசேஷம் அறிவிக்கும் வரை அமைதியாக இருங்கள்," என்று சொன்னார். கத்தோலிக்கத் திருச்சபை அவரை இகழ்ந்து தள்ளியது, ஆனால் அவர் போன பிறகு, அவர்கள் அவரைப் புனிதராக அங்கீகரித்து, பின்னர் அவரைப் புனிதராக அறிவித்தார்கள்.

ஜோன் ஆஃப் ஆர்க்கைப் (Joan of Arc) பாருங்கள் (இங்கிருக்கும் பள்ளி மாணவர்களே), ஜோன் ஆஃப் ஆர்க், தரிசனங்களைக் கண்ட, ஆவிக்குரிய ஒளியைப் பெற்றிருந்த ஒரு ஆவிக்குரிய பெண்மணி. கத்தோலிக்கத் திருச்சபை அவளைப் பற்றி என்ன சொன்னது? "அவள் ஒரு சூனியக்காரி." அவர்கள் அவளைக் கம்பத்தில் கட்டி எரித்தார்கள்.

சுமார் இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பெண் ஒரு புனிதவதி என்று அவர்கள் உணர்ந்தார்கள். எனவே அவர்கள்

மனந்திரும்பினார்கள்; அவர்கள் அந்தப் பாதிரியார்களின் சடலங்களைத் தோண்டி எடுத்து ஆற்றில் எறிந்தார்கள். அது ஒரு பெரிய மனந்திரும்புதல். ஆனால் அவள் போன பிறகுதான் அவர்கள் அவளை அங்கீகரித்தார்கள்.

இப்போது, இரண்டு முறை இரண்டு நான்கு என்று உங்களால் கணக்குப் போட முடிகிறதா? நீங்கள் எதையோ தேடிக்கொண்டிருக்கிறீர்கள் (நான் மீண்டும் இந்தப் பீடத்தில் இருக்க முடியாமல் போகலாம்.), உங்களைக் கடந்து செல்லும் ஒன்றை நீங்கள் தேடிக் கொண்டிருக்கிறீர்கள், ஆனால் நீங்கள் அதை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. சிறிது நேரம் கழித்து அது போன பிறகு, அவர்கள் இதை எடுத்து, "இது ஏன் நடந்தது? இந்த எழுப்புதல் எப்போது நடந்தது? இது எப்போது சம்பவித்தது?" என்று சொல்வார்கள். அப்போது வெகுதூரத்திற்குச் சென்றிருக்கும்.

41 பரலோக பிதாவே, உமது மகிமையை நாங்கள் காணும்படி இன்றிரவு எங்கள் கண்களைத் திறந்தருளும். இப்போது எங்களுக்குக் கிருபை தாரும், ஆண்டவரே.

நாங்கள் உமக்காகக் காத்திருக்கிறோம். இயேசுவின் நாமத்தில். ஆமென்.

42 ஜெப அட்டைகள் K, நாம்...?... [சகோதரர் பிரான்ஹாம் ஒருவரிடம் கேட்கிறார்] "இன்று மதியம் நாம் எங்கிருந்து அழைத்தோம்? ஐம்பதா? ஆம். ஐம்பது, அது சரி என்று நினைக்கிறேன். ஐம்பது, நாம்... என்ன சொன்னீர்கள்? 1 முதல் 20 வரை. சரி. இன்று மதியம் நாம் அதன் முதல் பகுதியை எடுத்தோம். இன்றிரவு கடைசிப் பகுதியை எடுப்போம். K-85-லிருந்து தொடங்குவோம்; 85, 90, 95, 100, அது போதுமானதாக இருக்கும். K-85 யாரிடம் உள்ளது? உங்கள் கையை உயர்த்துங்கள். அந்தக் கருப்பினப் பெண்மணி, அங்கே பின்னால். இங்கே வாருங்கள், அம்மா, மேடைக்கு நேராக இங்கே. 85, 86? அந்தச் சிறிய பெண்மணி, இங்கே. சரி, இங்கே. 87. இது வரிசைப்படுத்துவதற்கு. 87. யாரிடமாவது இருக்கிறதா? நீங்களா, அம்மா. 87, 88. ஜெப அட்டை 88 யாரிடம் உள்ளது? ஜெப அட்டை... [ஒலி நாடாவில் காலியிடம்]

43 எல்லோரும் மிகவும் அமைதியாக இருங்கள். இந்த வழியைப் பாருங்கள், ஜெபம் செய்யுங்கள். இப்போது, நீங்கள் உணர் கிறீர்களா... இங்கே எத்தனை கிறிஸ்தவர்கள் இருக்கிறீர்கள்? உங்கள் கையை உயர்த்துங்கள். இது எவ்வளவு பெரிய சவால் என்று நீங்கள் உணர்கிறீர்களா? நீங்கள் வந்து அந்த இடத்தைப் பிடித்துக்கொள்ள விரும்புகிறீர்களா? உங்களை வரவேற்கிறேன். நான் மிகவும் மகிழ்ச்சிய டைவேன், இங்கே வரிசையில் அமர்ந்து கவனிப்பேன், உங்களோடு ஜெபிப்பேன். நிச்சயமாக.

நான் எதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன்? நான் எதற்காக இங்கே நிற்கிறேன்? நான் இதைச் செய்தாக வேண்டுமா? இல்லை. தேவன் என்னைச் செய்யச் சொன்னதால் நான் இதைச் செய்கிறேன். அவரைப் பிரதிநிதித்துவப்படுத்த நான் இங்கே ஒரு தெய்வீக வரத்துடன் நிற்கிறேன், நான் அல்ல, அவரே. நியாயத்தீர்ப்பின் போது நான் உங்களுடன் நிற்க வேண்டும். அதுதான் அங்கே வித்தியாசமாக இருக்கப்போகிறது. இப்போது, நியாயத்தீர்ப்பில் நான் பதில் சொல்ல வேண்டும்; நீங்களும்

பதில் சொல்ல வேண்டும். நான் பிரசங்கித்தேனா என்று நான் பதில் சொல்ல வேண்டும்; நீங்கள் அதை ஏற்றுக்கொண்டீர்களா இல்லையா என்று நீங்கள் பதில் சொல்ல வேண்டும்.

44 இப்போது, உங்களில் எவரேனும்... இயேசு இப்போது (இப்போதே) நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதாபப்படக்கூடிய பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்று வேதாகமம் சொல்வதை இங்கே எத்தனை பேர் அறிவீர்கள்? நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? வேதாகமம் அப்படிச் சொல்கிறது. அப்படி யானால், அந்தப் பெண் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டது போல நாம் எப்படி அவரைத் தொடுவது? ஆமாம், ஐயா. அவள் தன் பலவீனத்தின் உணர்வினால் தொட்டாள். அவள் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்; அவர் திரும்பிப் பார்த்து, "என்னைத் தொட்டது யார்?" என்று கேட்டார். அவருக்குத் தெரியவில்லை, அவரைத் தொட்டது யார் என்று தெரியவில்லை. அவர், "என்னைத் தொட்டது யார்?" என்று கேட்டார்.

அதற்குப் பேதுரு, "எல்லாரும் உம்மைத் தொட்டுக்கொண்டிருக்கிறார்களே," என்றான்.

அவர், "ஆனால் நான் பலவீனமடைந்தேன்; என்னிடமிருந்து வல்லமை (சக்தி) புறப் பட்டது," என்றார். பாருங்கள்?

இப்போது, ஒரு தரிசனத்தைச் சிந்தித்துப் பாருங்கள். அந்த ஒரு பெண் அவரைத் தொட்டாள், தேவனுடைய குமாரன் பலவீன மடைந்தார். நான் எம்மாத்திரம், அவருடைய கிருபையால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவி? ஒன்று எனக்கு என்ன செய்யும்? பாருங்கள்? ஆனால் ஏன் அது பலமுறை நடந்து கொண்டிருக்கிறது. இன்று மதியம் இதைப் பாருங்கள், இங்கே நாம் மீண்டும் தொடங் குகிறோம். அது ஏன் நடக்கிறது? ஏனென்றால் இயேசு, "நான் செய்கிற இந்தக் கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்; இதைவிடப் பெரிய கிரியைகளையும் செய்வீர்கள், ஏனென்றால் நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன்," என்று சொன்னார். அது அவருடைய வார்த்தை.

45 இப்போது, நீங்கள், "யாரையாவது குணமாக்குங்கள்," என்று சொல்கிறீர்கள். என்னால் முடியாது, நிச்சயமாக முடியாது. இப்போது, நீங்கள் மிகவும் பயபக்தியுடன் இருங்கள். அசைவாடாதீர்கள்; உங்கள்

இருக்கையில் இருங்கள். மிகவும் அமைதியாக அமருங்கள், ஜெபம் செய்யுங்கள்.

அவரைத் தொடுங்கள். உங்கள் விசுவாசத்தினால் நீங்கள் அவரைத் தொட்டால், பிறகு அவர் உடனே திரும்பி உங்களைத் தொடுகிறாரா, உங்களுடன் பேசுகிறாரா, கேட்கக்கூடிய குரலில் பேசுகிறாரா என்று பாருங்கள். அவர் வேறொருவருடைய குரலைப் பயன்படுத்த வேண்டியிருக்கலாம், ஏனென்றால் அவருக்கு இருக்கும் ஒரே குரல் என்னுடையதும் உங்களுடையதும் தான். அவருக்கு இருக்கும் ஒரே கைகள் என்னுடையதும் உங்களுடையதும் தான். நாம்-நாமே திராட்சச்செடி, கொடிகள்.

46 இப்போது, நாம் ஜெபிக்கும்போது அனைவரும் பயபக்தியுடன் இருங்கள். பரலோக பிதாவே, இன்றிரவு நான் உம்மிடம் ஜெபிக்கிறேன், நானே இந்தக் கூட்டத்தாரோடு சேர்ந்து அவர்கள் நோயின் நிமித்தம் அவர்களைக் கொண்டு வருகிறேன். ஓ இரக்கமுள்ள தேவனே, ஒவ்வொருவரிடமும் அன்பாயிரும். இன்றிரவு அவர்கள் இருதயங்கள் திறக்கப்படட்டும்.

அவர்கள் புரிந்து கொள் ளட்டும். அவர்கள் கண்களில் கலிக்கம் போடும். என் கண்களிலும் போடும் ஆண்டவரே, அப்போதுதான் அதரிசனமான தேவன் தாம் வாக்குறுதி அளித்தபடியே தம்முடைய ஜனங்களின் மத்தியில் கிரியை செய்வதை நாங்கள் காண முடியும். கர்த்தராகிய தேவன், யேகோவா நம்மை விட்டு விலகுவதில்லை என்று வாக்குறுதி அளித்தார். அவர் நம்முடன் இருப்பேன் என்று வாக்குறுதி அளித்தார். அவர் வரும்வரை, அவர் செய்து கொண்டிருந்த அதே விதமான கிரியைகளை நாமும் செய்வோம் என்று அவர் வாக்குறுதி அளித்தார்.

இப்போது, பிதாவாகிய தேவனே, எனக்குத் தெரிந்த அனைத்தையும் நான் செய்துவிட்டேன், அடுத்தது உம்முடையது. இப்போது, நாங்கள் எங்களை உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம், இன்றிரவு நீர் எங்களைச் சந்தித்து, எங்கள் இருதயங்களுக்கு மகிழ்ச்சியையும், எங்கள் சரீரங்களுக்குச் சுகத்தையும் கொண்டு வரும்படி வேண்டிக்கொள்கிறோம். இயேசுவின் நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென்.

47 அடுத்தது தேவனுக்காக. எனக்குத் தெரிந்தவரை, இப்போது என் அருகில் நிற்கும் பெண்மணி, எனக்கு அறிமுகமில்லாதவர். நான் இன்று மதியம் குறிப்பிட்டது போல, எனக்கு அந்தப் பெண்மணியைத் தெரியாது. நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள் என்று நினைக்கிறேன்? நாம் அந்நியர்களே. இந்தப் பெண்மணி ஒரு கருப்பினப் பெண்மணி; நான் ஒரு வெள்ளைக்காரன்.

இது மீண்டும் கிணற்றடியில் இருந்த அந்தப் பெண்ணின் படம் இல்லையா, ஒரு யூதரும் சமாரியப் பெண்ணும்... தேவனிடத்தில் இன பாகுபாடுகள் இல்லை என்பதை இயேசு அவளுக்குத் தெரியப்படுத்தினார். உங்கள் தோலின் நிறம் ஒரு பொருட்டல்ல; அதற்கும் தேவனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

மஞ்சள், பழுப்பு, கருப்பு அல்லது வெள்ளை என நாம் ஒவ்வொருவரும் ஒரே மரத்திலிருந்து வந்தவர்களே, சரியாகச் சொன்னால். நாம் வளர்ந்த நாடு ஒன்றும்... நம் தோலின் நிறம் மற்றொன்றை விட உயர்ந்ததல்ல, அதற்கும் தேவனுக்கும் எந்த

சம்பந்தமும் இல்லை. ஒரே இரத்தத்தினால் தேவன் எல்லா மனுஷரையும் உண்டாக்கினார்.

நான் மரித்துக் கொண்டிருந்தால், இந்தப் பெண்மணி எனக்கு இரத்தம் கொடுக்க முடியும். ஆனால் ஒருபோதும் ஒரு விலங்கின் இரத்தத்தை உங்களுக்குள் செலுத்தாதீர்கள், நீங்கள் இறந்துவிடுவீர்கள். இவளுடைய இரத்தம் என்னுடையதைப் போன்றதே. தேவன் நம் இருவரையும் படைத்தார், இன்று மதியம் நாங்கள் இங்கே நிற்கிறோம், இருவரும் அந்நியர்கள், ஒருவரையொருவர் பார்த்ததில்லை.

அவள் ஒரு கருப்பினப் பெண்மணி, நான் ஒரு வெள்ளைக்காரன், யோவான் 4-ன் மிக அழகான படம் இது இல்லையா. இது வேதப்பூர்வமாக உண்மை என்று எத்தனை பேருக்குத் தெரியும். இந்தப் பெண் எங்கே சென்றாள் என்பதை நீங்கள் வாசித்திருப்பீர்கள். இப்போது, இயேசு அவளிடம் பேசத் தொடங்கினார், அவர் சொன்னார்... அவளுக்கு என்ன தவறு என்பதை அவர் கண்டுபிடிக்கும் வரை.

அவர், "எனக்குக் குடிக்கத் தா," என்றார். அவளுக்கு அது புரியவில்லை.

அவள், "யூதர்களாகிய நீங்கள் ஏன் சமாரியர்களாகிய எங்களுடன் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்வதில்லை. எங்களிடம் ஒரு பிரிவினை இருக்கிறது, அப்படியிருக்க நீர் ஏன்...?" என்று கேட்டாள்.

அவர், "உன்னுடன் பேசுவது யார் என்று உனக்குத் தெரிந்திருந்தால், நீ என்னிடம் குடிக்கக் கேட்டிருப்பாய்," என்றார்.

எங்கே தொழுதுகொள்வது என்பதைப் பற்றிய உரையாடல் நீண்ட நேரம் சென்றது. சிறிது நேரத்திற்குப் பிறகு, அவளுடைய பிரச்சினை என்னவென்று இயேசு கண்டு பிடித்தார், அவர், "போய் உன் கணவனை இங்கே அழைத்து வா," என்றார்.

அவள், "எனக்குக் கணவன் இல்லை," என்றாள்.

"அது சரிதான், உனக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள், இப்போது உனக்கு இருப்பவன் உன் கணவன் அல்ல," என்றார்.

அவள் என்ன சொன்னாள் என்று பாருங்கள், "ஐயா, நீர் ஒரு தீர்க்கதரிசி என்று காண்கிறேன். ஆனால் மேசியா வரும்போது என்று எங்களுக்குத் தெரியும், சமாரியர்களாகிய எங்களுக்குத் தெரியும்..." [ஒலி நாடாவில் காலியிடம்]...?...

ஜெபக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்பு அவர் எங்கே இருந்தார் என்று இயேசு அவரிடம் சொன்னபோது, அவர் தேவனுடைய குமாரன் என்று அவன் அங்கீகரித்தான். அது சரியா? மேசியா, அது எத்தனை பேருக்குத் தெரியும்? யோவான் 1-ம் அதிகாரம். யூதர்கள் நினைத்தது அதுதான். பெரிய போதகர்களும் அறிஞர்களும் என்ன சொன்னார்கள்? "அவன் ஒரு பிசாசு. அது ஒரு குறிசொல்லுதல்." பாருங்கள்?

இயேசு என்ன சொன்னார்? "என்னைப் பற்றி நீங்கள் அப்படிச் சொல்வதை, நான் உங்களுக்கு மன்னிப்பேன், ஆனால் பரிசுத்த ஆவியானவர் வந்து அதே காரியத்தைச் செய்யும்போது, அவருக்கு விரோதமாக ஒரு வார்த்தை பேசினாலும் அது உங்களுக்கு மன்னிக்கப்படுவதில்லை, இம்மையிலும் மறு

மையிலும் மன்னிக்கப்படுவதில்லை," என்றார். ஏனென்றால் அவர்கள் தேவனுடைய ஆவியை அசுத்த ஆவி என்று அழைத்தார்கள். அதுதான்...

பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணம் அதுதான் என்று எத்தனை பேர் அறிவீர்கள்? தேவனுடைய கிரியைகளையே பிசாசு என்று அழைப்பது. இயேசு சொன்னது அதுதான். அதுதான் தேவதூஷணம், மன்னிக்க முடியாதது, அதைச் செய்ததற்காக ஒருபோதும் மன்னிக்க முடியாது.